# ශ්‍රී ලංකා ප්‍රජාතාන්ත්‍රික සමාජවාදී ජනරජයේ ගැසට් පත්‍රය
# இலங்கைச் சனநாயக சோசலிசக் குடியரசு வர்த்தமானப் பத்திரிகை

අංක 2032 - 2017 අගෝස්තු මස 11 වැනි සිකුරාදා - 2017.08.11

*2032 ஆம் இலக்கம் - 2017 ஆம் ஆண்டு ஓகத்து மாதம் 11 ஆந் திகதி வெள்ளிக்கிழமை*

(அரசாங்கத்தின் அதிகாரத்துடன் பிரசுரிக்கப்பட்டது)


## பகுதி I : தொகுதி (IIஅ) - விளம்பரங்கள்

(ஒவ்வொரு மொழியின் ஒவ்வொரு பகுதியும் வெவ்வேறாக கோவை செய்து வைப்பதற்காகத் தனித்தனிப் பக்கங்களில் தரப்பட்டுள்ளன.)


| | பக்கம் | | பக்கம் |
|---|---|---|---|
| பதவிகள் - வெற்றிடம் | - | பரீட்சைகளும் பரீட்சைப் பெறுபேறுகளும் பிறவும் | 1373 |


**கவனிக்க.**- (i) அரசியலமைப்புக்கான இருபதாவது திருத்தம் சட்டமூலம் 2017, யூலை மாதம் 28 ஆந் திகதிய இலங்கைச் சனநாயக சோசலிசக் குடியரசு வர்த்தமானியின் பகுதி II இற்கு குறைநிரப்பியாக வெளியிடப்படுகிறது.

(ii) மாகாண சபை தேர்தல்கள் (திருத்தும்) சட்டமூலம் 2017, யூலை மாதம் 28 ஆந் திகதிய இலங்கைச் சனநாயக சோசலிசக் குடியரசு வர்த்தமானியின் பகுதி II இற்கு குறைநிரப்பியாக வெளியிடப்படுகிறது.

**வாராந்த வர்த்தமானிகளிற் பிரசுரிப்பதற்கான அறிவித்தல்கள் ஏற்றுக்கொள்ளல் சம்பந்தமான**

**முக்கிய அறிவித்தல்கள்**

இலங்கைச் சனநாயக சோசலிசக் குடியரசு வாராந்த வர்த்தமானப் பத்திரிகைகளின் இறுதியில், ஒவ்வொரு மாதத்தின் முதல் வாரத்தின், வாராந்த வர்த்தமானப் பத்திரிகைகளில் பிரசுரிக்கப்படுவதற்கான அறிவித்தல்கள் ஏற்றுக்கொள்ளப்படும் இறுதித் திகதியும் நேரமும் சம்பந்தமான அறிவித்தல்களுக்கு கவனம் கோரப்படுகின்றது.

வாராந்த வர்த்தமானிகளிற் பிரசுரிக்கப்படுவதற்கான அறிவித்தல்கள் ஏற்றுக்கொள்ளப்படும் இறுதித் தினம் அவை **வர்த்தமானியில் பிரசுரமாகும் திகதிக்கு இரண்டு வாரங்களுக்கு முந்திய வெள்ளிக்கிழமை, நண்பகல் 12.00 மணியாகும்.** இறுதித் திகதியும் நேரமும் குறிப்பிடும் அறிவித்தல்களான, பதவி வெற்றிடங்கள் மற்றும் பரீட்சைகளுக்கு விண்ணப்பம் கோரும் அறிவித்தல்கள், கேள்விப்பத்திர அறிவித்தல்கள் அத்துடன் ஏல விற்பனைத் திகதியும் நேரமும் குறிப்பிடும் அறிவித்தல்கள் என்பன அவ்வவ் அறிவித்தல்களில் உள்ள விடயங்களில் அக்கறை செலுத்துவோர் ஆக்கபூர்வமாக பயனுறும் வகையில் அவை பிரசுரிக்கப்படுவதற்காக அரசாங்க அச்சகத்துக்கு அனுப்பிவைக்கப்படும் திகதியிலிருந்தும் அத்துடன் அவை பிரசுரமாகும் திகதியிலிருந்தும் போதிய கால அவகாசம் கொண்டதாக தயாரிக்கப்பட்டு அனுப்பிவைக்கப்பட வேண்டும் என சகல அரசாங்க திணைக்களங்கள், கூட்டுத்தாபனங்கள், சபைகள் ஆகியன அறிவுறுத்தப்படுகின்றன. அறிவித்தல்கள் தொடர்பிலான பிழைதிருத்தங்கள் சம்பந்தமாக செய்யப்படும் முறைப்பாடுகள் மற்றும் விசாரணைகள் என்பன வர்த்தமானியில் குறிப்பிட்ட அறிவித்தல்கள் பிரசுரமாகிய திகதியிலிருந்து மூன்று மாதங்கள் கழிந்த பின்னர் ஏற்றுக்கொள்ளப்படமாட்டா என்பதனை கவனத்திற்கொள்ளவும்.

வர்த்தமானப் பத்திரிகையில் பிரசுரமாகும் சகல அறிவித்தல்களும், அவை பிரசுரமாகும் திகதிக்கு இரண்டு வாரங்களுக்கு முன்னர், அதாவது 2017, ஓகத்து மாதம் 31 ஆந் திகதி வியாழக்கிழமை பிரசுரிக்கப்படவேண்டிய அறிவித்தல்கள் 2017, ஓகத்து மாதம் 18 ஆந் திகதி நண்பகல் 12.00 மணிக்கு அல்லது அதற்கு முன்னர் கிடைக்கக்கூடியவாறு தபால் மூலம் அல்லது நேரில் சேர்ப்பிக்கப்பட வேண்டும்.

**2006 ஆம் ஆண்டின் 19 ஆம் இலக்க, இலத்திரனியல் கொடுக்கல் வாங்கல் சட்டத்தின் 9 ஆம் பிரிவு**

"ஏதேனும் பிரகடனம், விதி, ஒழுங்கு விதி, கட்டளை, துணை விதி, அறிவிப்பு அல்லது வேறு விடயம் வர்த்தமானியில் வெளியிடப்பட வேண்டுமென ஏதேனும் சட்டம் அல்லது சட்டவாக்கம் ஏற்பாடு செய்யுமிடத்து, அப்போது, அத்தகைய விதி, ஒழுங்குவிதி, கட்டளை, துணை விதி, அறிவிப்பு அல்லது வேறு விடயம் இலத்திரன் வடிவத்தில் வெளியிடப்படின், அத்தகைய தேவைப்பாடு திருப்திப்படுத்தப்பட்டுள்ளதாகக் கருதப்படுதல் வேண்டும்."

**கங்கானி லியனகே,**
அரசாங்க அழுத்தகர் (பதில்).

அரசாங்க அச்சுத் திணைக்களம்,
கொழும்பு 8,
2017 ஆம் ஆண்டு சனவரி மாதம் 01 ஆந் திகதி.

இவ்வர்த்தமானியை www.documents.gov.lk எனும் இணையத்தளத்திலிருந்து பதிவிறக்கம் செய்ய முடியும்.


1371 - B81196 - 5,403 (2017/08)

# பரீட்சார்த்திகள் கவனிக்க வேண்டிய விதிகளும் அறிவுறுத்தல்களும்

*1968 ஆம் ஆண்டின் 25 ஆம் இலக்கத்தைக் கொண்ட பரீட்சைகள் செய்சட்டத்தின் ஏற்பாடுகளுக்கு இணங்கச் செயற்படுதற்கு பரீட்சார்த்திகள் அனைவரும் கடப்பாடுடையவர்களாவர்.*

*எல்லாப் பரீட்சார்த்திகளும் கீழ்வரும் விதிகளுக்கமைய நடந்துகொள்ள வேண்டும் விதிகளை மீறி நடக்கும் பரீட்சார்த்தி பரீட்சை ஆணையாளர் நாயகத்தின் விரகின்படி கீழ்காணும் தண்டனைகளில் ஒன்றினையோ பலவற்றையோ ஏற்றவாறு பெறுவர்.*

(i) *முழுப்பரீட்சையிலிருந்து அல்லது அதன் ஒரு பகுதியிலிருந்து நிறுத்திவைக்கப்படுவர். ஒரு பாடத்திலிருந்தோ அதன் பகுதியிலிருந்தோ நிறுத்திவைக்கப்படுவர் ;*

(ii) *ஒரு பாடத்துக்கோ பரீட்சைக்கோ தகுதியற்றவர் ஆக்கப்படுவர் ;*

(iii) *ஒரு வருடத்துக்கு அல்லது இரண்டு வருடங்களுக்குப் பரீட்சைக்குத் தோற்றாதவாறு தடுத்துவைக்கப்படுவர் ;*

(iv) *சீவியகாலம்வரை பரீட்சைக்குத் தோற்றாதவாறு தடுத்து வைக்கப்படுவர் ;*

(v) *ஒரு கால எல்லைக்குத் தராதரப் பத்திரத்தைப் பயன்படுத்த முடியாமல் தடுத்துவைக்கப்படுவர் ;*

(vi) *பரீட்சார்த்தியின் நடத்தை பற்றி அவருடைய மேலதிகாரிக்குத் தெரிவித்தல் அல்லது பொலிசாரிடம் பரீட்சார்த்தியை ஒப்படைத்தல் அல்லது விடயத்தைப் பொலிசாரிடம் ஒப்படைத்தல்.*

*பரீட்சைக்கு முன்னரோ, பரீட்சை நடக்கும்பொழுதோ பரீட்சைக்குப் பின்னரோ தேவையான நடவடிக்கை எவையேனும் அவசியமெனப் பரீட்சாதிகாரி தீர்மானித்தால் அத்தீர்மானம் முடிவானதாகக் கொள்ளப்படும். எனினும், அரசாங்க சேவைக்குப் பரீட்சார்த்திகளைத் தெரிந்தெடுக்கும் பரீட்சைகளைச் சார்ந்த பரீட்சாதிகாரியின் தீர்மானம் அரசாங்க சேவை ஆணைக்குழுவால் பரிசீலனை செய்வதற்குட்பட்டதாகும்.*

*1. ஒவ்வொரு பரீட்சார்த்தியும் பரீட்சை மண்டபத்தைச் சார்ந்த இடங்களிலிருந்து மேற்பார்வையாளருக்கோ அவருடைய உதவி உத்தியோகத்தருக்கோ மற்றைய பரீட்சார்த்திகளுக்கோ வசதியீனத்தையும் தொந்தரவையும் உண்டுபண்ணாது நடந்துகொள்ள வேண்டும். பரீட்சை மண்டபத்துள் பிரவேசிக்கும் போதும் வெளியேறும்போதும் பரீட்சார்த்தி அமைதியாக நடந்துகொள்ளுதல் வேண்டும்.*

*2. பரீட்சார்த்திகள் மேற்பார்வையாளரின் அதிகாரத்துக்குட்பட்டவராவர். பரீட்சை நடக்கும்பொழுதும் அதற்கு முன்னரும் பின்னரும் பரீட்சை மேற்பார்வையாளரும் கவனிப்பாளரதும் கட்டளைப்படி நடந்து பரீட்சை மேற்பார்வையாளருக்கு உதவிசெய்தல் வேண்டும்.*

*3. பரீட்சை மண்டபத்தில் பூரண அமைதி நிலவச் செய்ய வேண்டும். பரீட்சார்த்திகள் எக்காரணம் பற்றியும் மண்டபத்திலுள்ள மற்றும் பரீட்சார்த்திகளுடனோ வெளியேயுள்ள பரீட்சார்த்திகளுடனோ தொடர்புவைத்துக்கொள்ள அனுமதிக்கப்பட மாட்டார். பரீட்சை உத்தியோகத்தர்களுடன் மாத்திரமே தொடர்பு வைத்துக்கொள்ள அனுமதிக்கப்படுவர். மிக அத்தியாவசியமான நிலைமையுண்டானால் மேற்பார்வையாளரின் அனுமதியைப் பெற்றுக்கொள்ள வேண்டும்.*

*4. மேற்பார்வையாளரால் ஒழுங்குசெய்யப்பட்ட மேசையைவிட வேறெந்த மேசையையும் பரீட்சார்த்தி உபயோகிக்கக்கூடாது. மேற்பார்வையாளரின் அனுமதியோடன்றி ஒரு மாற்றமும் செய்யக்கூடாது. பரீட்சார்த்தி தமக்கு ஒழுங்குசெய்யப்படாத வேறு ஒருவரின் ஆசனத்திலிருந்தால் அவர் நேர்மையீனமான முறையில் நடந்துகொள்ள எத்தனித்ததாகக் கருதப்படுவர்.*

*5. பரீட்சார்த்தி தமது விடைத்தாளில் பெயரை எழுதாது சுட்டிலக்கத்தையே எழுதுதல் வேண்டும். ஒரு பரீட்சார்த்தி பிறிதொரு பரீட்சார்த்தியின் சுட்டிலக்கத்தைத் தமது விடைத்தாளில் குறித்திருந்தால் அவர் ஏமாற்றுவதற்கு எத்தனித்ததாகக் கருதப்படுவர். சுட்டிலக்கம் தெளிவற்ற முறையில் எழுதப்பட்டிருந்தால் அவ்விடைத்தாள் கவனிக்கப்பட மாட்டாது.*

*6. பரீட்சார்த்திக்குக் கொடுக்கப்பட்ட விடையெழுதுந்தாளையோ வெறெவ்விதப் பொருளையோ பரீட்சை மண்டபத்திலிருந்து வெளியே எடுத்துக்கொண்டு போதல் கூடாது. அத்தகைய விடை எழுதுந்தாளும் பொருளும் பரீட்சாதிகாரிக்குச் சொந்தமானவையாகும். இவ்விதிக்கு மாறாக நடந்துகொண்டால் அது நேர்மையீனமான நோக்கங்களைக் கொண்ட நடத்தையெனக் கருதப்படும்.*

*7. வினாத்தாள் கொடுக்கப்பட்ட அரை மணித்தியாலத்துக்குப் பின் பரீட்சார்த்தி எச்சந்தர்ப்பங்களைக் கொண்டும் பரீட்சை மண்டபத்துக்குள் அனுமதிக்கப்பட மாட்டார் இந்த நேர எல்லை கழிந்த பின்னர் தான் பரீட்சார்த்தி பரீட்சை மண்டபத்திலிருந்து வெளியேறவும் அனுமதிக்கப்படுவர். செய்முறை அல்லது வாய்மொழிப் பரீட்சை மண்டபத்துக்குள் அனுமதிக்க மறுக்கலாம்.*

*8. பரீட்சார்த்திகள் எழுதுவதற்கெனக் கொடுக்கப்பட்ட விடைத்தாளில் எழுதுவதேயல்லாமல் ஒற்றுத்தாளிலோ வினாத்தாளிலோ மேசையிலோ வேறெந்த இடத்திலோ எழுதக்கூடாது. இவ்விதிக்கு முரணாக நடந்தால் பரீட்சார்த்தி நேர்மையற்ற நோக்கங்களுடன் நடந்துகொண்டதாகக் கருதப்படுவர்.*

*9. ஒரு பரீட்சார்த்திக்குக் கொடுக்கப்பட்ட கடதாசியோ விடைப் புத்தகமோ கிழிக்கப்படவோ கசக்கப்படவோ மடிக்கப்படவோ வேறெவ்விதத்திலோ சேதப்படுத்தப்படவோ கூடாது. பருமட்டான வேலை செய்யப்பட்ட கடதாசியும் புறக்குறிப்பு எழுதிய கடதாசியும் விடைத்தாள்களின் பகுதியாக அமைய வேண்டும். அத்தகைய பருமட்டான வேலை முதலியவற்றை ஒழுங்காகக் கீறிவிடவேண்டும். பரீட்சை மண்டபத்தில் எழுதிய எவற்றையும் வெளியே எடுத்துச்செல்லல் ஆகாது. ஒரு வினாவுக்கு ஒன்றுக்கு மேற்பட்ட பலவிடங்களில் விடையெழுதியிருந்தால் தேவைப்படாத விடைகளை வெட்டிவிடுக. இவ்விதிக்கு மாறாக நடந்தால் அது ஏமாற்றுவதற்கு எத்தனமெனக் கருதப்படும்.*

*10. கணித சம்பந்தமான வினாக்களுக்குப் பிழையான செய்கை வழிகளுடனோ செய்கை வழியில்லாமலோ சரியான விடைகள் இருந்தால் சித்திரத்தில் அலங்கார ரூபச் சித்திரமும், கருத்து வெளிப்பாட்டுச் சித்திரமும் கருத்திலும் அளவிலும் நோக்கத்திலும் பெரும்பாலும் வேறுமொன்றினோடு ஒத்திருந்தால் அல்லது பெரும்பாலும் ஒத்திருந்தால் அவை நேர்மையற்ற வழிகள் மூலம் பெற்றவையெனக் கருதப்படும்.*

*11. பரீட்சை மண்டபத்துள் ஒரு பரீட்சார்த்தி தம்வசம் அல்லது பக்கத்தில் எவ்விடத்திலேனும் புத்தகம், சட்டைப்பையில் வைக்கக்கூடிய புத்தகம், குறிப்புப் புத்தகம், கொப்பிப் புத்தகம் முதலியவைகளையோ மண்டபத்துள் கொடுக்கப்பட்ட தாள்களைவிட வேறு தாள்களையோ வைத்திருக்கக் கூடாது. தேவைக்கு வேண்டிய மாதிரி வர்ணப்பெட்டியையோ, கணிதக் கருவிப்பெட்டியையோவிட கைப்பை, அழகு செய்செப்பு, பார்சல் முதலியவற்றையோ, கோவை அட்டை, கடதாசி மட்டை, வெற்றுக் கடதாசிக் கொப்பி, மடித்த புதினப்பத்திரிகை, மாட்டுத்தாள் முதலியவற்றையோ வைத்திருக்கக் கூடாது. இப்பிரமாணத்தை மீறி நடப்போர் தண்டனைக்கு உள்ளாவார்கள்.*

*12. பரீட்சை மண்டபத்திலிருக்கும் பரீட்சார்த்தி தம்வசம் புத்தகங்களையோ குறிப்புக்களையோ வைத்திருக்கக் கூடாது. மேற்பார்வையாளருக்கு தேவையெனக் கண்டால், ஒவ்வொரு பரீட்சார்த்தியும் தம்வசமுள்ள பொருள்கள் இவையெனக் கூறிவிட வேண்டும். இந்நிபந்தனைகளை மீறினால் நேர்மையற்ற முறைகளைக் கையாண்டதாகக் கருதப்படுவர்.*

*13. பிற பரீட்சார்த்திகளின் விடைத்தாளிலிருந்தோ புத்தகத்திலிருந்தோ கடதாசியிலிருந்தோ குறிப்புகள் முதலியவற்றிலிருந்தோ பரீட்சார்த்திகள் பார்த்து எழுதக்கூடாது என எச்சரிக்கை செய்யப்படுகின்றனர். ஒரு பரீட்சார்த்தி வேறொரு பரீட்சார்த்தியின் விடைத்தாளைப் பார்க்க எத்தனிக்கக்கூடாது. ஒரு பரீட்சார்த்தி வேறொரு பரீட்சார்த்திக்கு உதவிசெய்யவும் அப்பரீட்சார்த்தியிடமிருந்தோ வேறொருவரிடமிருந்தோ உதவி பெறவுங்கூடாது. விடையெழுதப்பட்ட ஒவ்வொரு தாளும் எழுதப்படும் தாளின்கீழ் வைக்கப்பட வேண்டும். விடைத்தாளைக் கண்டபடி மேசைக்குமேல் விடக்கூடாது.*

*14. தற்காலிகமாகப் பரீட்சை மண்டபத்தைவிட்டு வெளியே செல்ல பரீட்சார்த்திகளுக்கு எச்சந்தர்ப்பத்திலும் அனுமதி கொடுக்கப்படமாட்டாது. எனினும் அவசியமான சந்தர்ப்பங்களில் மேற்பார்வையாளர் வேண்டிய அனுமதியைக் கொடுப்பர். ஆனால் பரீட்சார்த்தி ஒரு கவனிப்பாளருடன் செல்லவிடப்படுவர். பரீட்சை மண்டபத்திலிருந்து வெளியே செல்லும்பொழுதும், மீண்டும் வரும் பொழுதும் சோதிக்கப்படுவர்.*

*15. பரீட்சை மண்டபத்தில் அல்லது பரீட்சைக்கு முன்னர் ஒருவருக்காக வேறொருவர் எழுதுவது குற்றமாகும். உண்மை பற்றிய அடையாளப் பத்திரங்களில் மாற்றங்கள் செய்தல், பிழையான விபரங்கள் கொடுத்தல், பிழையான விபரங்களைச் சரியென உறுதிப்படுத்தல் என்பன குற்றமாகும். இவற்றையிட்டு பரீட்சார்த்திகள் எச்சரிக்கை செய்யப்படுகின்றனர்.*

*16. பரீட்சார்த்தியல்லாத ஒருவர் பரீட்சார்த்திக்கு நேர்மையல்லாத முறையில் உதவி செய்வது பாரதூரமான குற்றமெனக் கருதப்படும்.*

*பரீட்சார்த்திகள் தம் சொந்த நலனைக்கருதி கீழ்வரும் விதிகளைக் கவனித்தல் வேண்டும்*

(i) *ஒரு பாடம் தொடங்குவதற்குக் குறிக்கப்பட்ட நேரத்திலும் பார்க்க குறைந்தது 10 அல்லது 15 நிமிடங்களுக்கு முன்பாக பரீட்சை மண்டபத்தில் இருத்தல் வேண்டும். பரீட்சை மண்டபம் இருக்குமிடம் குறிப்பாகத் தெரியாவிடின் பரீட்சை நடக்கும் நாளுக்கு முன்நாளே விசாரித்து அறிந்துகொள்ள வேண்டும்.*

(ii) *ஒரு பாடத்துக்குத் தோற்றுவதைப் பற்றியோ தோற்றுவதற்குரிய தகுதிகளைப் பற்றியோ ஐயமேதுமிருப்பின் அப்பாடம் தொடங்குமுன் அதை மேற்பார்வையாளரிடமிருந்து தீர்த்துக்கொள்ள வேண்டும். இல்லாவிட்டால் குறிப்பிட்ட பாடத்திற்குத் தோற்றும் தகைமை நிராகரிக்கப்படக்கூடும்.*

(iii) *நீர் உண்மையான பரீட்சார்த்தியென நிரூபிப்பதற்குரிய சான்றுப்பத்திரங்கள் உம்மிடமிருந்து எதிர்பார்க்கப்பட்டால் ஒவ்வொரு பாடத்துக்குத் தோற்றும் பொழுதும் இப்பத்திரங்களைப் பரீட்சை மண்டபத்துக்கு நீர் கொண்டு வருதல் வேண்டும். தேவையான உறுதிப்பத்திரங்களை நீர் வைத்திருக்காவிடில் பரீட்சைக்குத் தோற்றும் உமது தகைமை நிராகரிக்கப்படும். உண்மை பற்றிய சான்றுப்பத்திரங்களைக் கொண்டுவர மறந்துபோனால் பரீட்சை முடியுமுன்னர் அவற்றைக் காண்பிப்பதாக மேற்பார்வையாளரோடு ஒழுங்கு செய்தல் வேண்டும்.*

(iv) *சாதாரணமாகப் பரீட்சைக்கு வேண்டிய விடைத்தாள், ஒற்றுத்தாள், கணனி ரேகைத்தாள், பேரேட்டுத்தாள், சுருக்கி எழுதுவதற்குரிய தாள் என்பன கொடுக்கப்படும். வழக்கமாகக் கொடுப்பதற்கு மாறாக வேறெவையேனும் கொடுக்கப்பட்டால் அதைப்பற்றி மேற்பார்வையாளருக்கு உடனே அறிவிக்க வேண்டும். உமக்கெனக் கொடுபடாத தாள் எவற்றையும் உபயோகிக்கக் கூடாது. மேல் மிச்சமாகக் கொடுக்கப்பட்ட எவற்றையும் சேதப்படுத்தாமல் உமது மேசைமேல் விட்டுவிடுக. மடக்கை வாய்ப்பாடுகள் கொடுக்கப்பட்டால் கவனமாக உபயோகித்த பின்னர் அவற்றை உமது மேசைமேல் விட்டுவிட வேண்டும்.*

(v) *சொந்தப் பேனைகள், மை, அடிமட்டைகள், கணித உபகரணக் கருவிகள், பென்சில், அழிறப்பர்கள், நிறப் பென்சில்கள், வர்ணக்கட்டிகள், நீர்வர்ணங்கள், விஞ்ஞானப் பிரதி செய்யும் தாள்கள் முதலியவற்றைப் பரீட்சார்த்திகள் கொண்டுவருதல் வேண்டும்.*

(vi) *விடைத்தாள் ஒவ்வொன்றிலும் நீர் உபயோகித்த வேறு தாளிலும் பரீட்சையின் பெயரையும் உமது சுட்டிலக்கத்தையும் கண்டிப்பாகக் குறிப்பாகக் குறிப்பிடுதல் வேண்டும். விடையெழுதுந் தாளில் இரு பக்கத்திலும் துப்புரவாகவுந் தெளிவாகவும் எழுதுதல் வேண்டும். ஒரு விடையிலுள்ள ஒவ்வொரு பகுதி விடைக்குமிடையில் ஒவ்வொரு வெற்றுக்கோடு விடப்பட வேண்டும். முழு விடைக்குப் பின்னர் ஒரு கோடு கீறப்பட வேண்டும். அல்லது சில வெற்றுக்கோடுகள் விடப்பட வேண்டும். விடைகளை ஒன்றோடொன்று நெருக்கி எழுத வேண்டாம்.*

(vii) *உமக்குக் கொடுக்கப்பட்ட விடைத்தாளிலுள்ள இடதுபக்க அடைப்பில் வினாவுக்குரிய இலக்கத்தை எழுதுக. வலதுபக்கத்து அடைப்பு, பரிசோதகரின் உபயோகத்துக்காக விடப்பட்டிருக்கிறது. தவறான இலக்கங்களிடின் சங்கடங்கள் ஏற்படுமாகையால் உமது விடைக்குரிய சரியான இலக்கங்களையிடுக.*

(viii) *எல்லா விபரமாக கணக்கீடுகளையும் பெரும்படியான வேலைகளையும் நீர் செய்யும் கணக்குக்குரிய செய்கை வழிகளில் முறையான அமைப்பு முறையில் தருக. வரைபடங்கள், கோட்டு ரூபங்கள், சிறு படங்கள் என்பன திட்டமாகவும் பெரிதாகவும் இருக்க வேண்டும். வரைபடத்தை அல்லது கோட்டு ரூபத்தை அல்லது சிறுபடத்தைக் காட்டி எழுதப்படும் விடை, விடைத்தாளில் மறுபக்கத்தில் தொடரப்படுமானால் அவ்வடிவங்கள் மறுபடியும் கீறப்பட வேண்டும்.*

(ix) *ஒவ்வொரு பாடத்தின் முடிவிலும் நீர் எழுதிய முறைப்படி உமது விடைத்தாள்களைக் கவனமாக ஒழுங்குபடுத்தி நெருக்கமாகவும் உறுதியாகவும் ஒன்றுசேர்த்து இடதுபக்கத்து மேல் மூலையில் (வலதுபக்க மேல் மூலையிலன்று) உமக்குக் கொடுக்கப்பட்ட நூலால் கட்டுதல் வேண்டும்.*

(x) *வினாப்பத்திரத்தின் தலைப்பில் கட்டாய வினாக்கள் தெரிவுக்குரிய வினாக்கள் பற்றியுள்ள விதிகளைக் கவனமாக அவதானித்தல் வேண்டும். இவற்றைக் கவனியாது விடைகள் எழுதப்படின் உமது சித்தியின் தரம் பாதிக்கப்படும்.*

(xi) *உமது விடைத்தாள்களைத நேரடியாக மேற்பார்வையாளரிடமோ கவனிப்பாளரிடமோ கொடுத்தல் வேண்டும். அல்லது இவர்களில் ஒருவர் வந்து ஏற்றுக்கொள்ளும் வரை உமது ஆசனத்தில் இருக்க வேண்டும். இது செய்யத் தவறினால் உமது விடைத்தாள் காணாமற் போய் இப்பாடத்துக்கு நீர் வரவில்லையென எண்ணப்படும். எக்காரணம் பற்றியும் சேவகரிடமோ பணியாளரிடமோ விடைத்தாள்களைக் கொடுத்தல் கூடாது.*

(xii) *மேற்பார்வையாளரிடம் அல்லது கவனிப்பாளரிடம் பேச அல்லது மேலதிகமான விடைத்தாள்கள் முதலியன பெறவேண்டினால் உமது ஆசனத்திலிருந்து கையை உயர்த்திக்காட்ட வேண்டும்.*

*பரீட்சை ஆணையாளர் நாயகம்.*

*இலங்கை பரீட்சைத் திணைக்களம்,*
*பெலவத்தை,*
*பத்தரமுல்லை.*

# பரீட்சைகளும் பரீட்சைப் பெறுபேறுகளும் பிறவும்

## கல்வி அமைச்சு

### இலங்கை அதிபர் சேவையின் 2 ஆம் வகுப்பின் உத்தியோகத்தர்களுக்கான வினைத்திறன்காண் தடைதாண்டல் பரீட்சை – 2017

இலக்கம் 1885/31 மற்றும் 2014.10.22 ஆம் திகதிய இலங்கை அதிபர் சேவை பிரமாணக் குறிப்பிற்கு அமைய இலங்கை அதிபர் சேவையின் 2 ஆம் வகுப்பின் உத்தியோகத்தர்களுக்கான வினைத்திறன்காண் தடைதாண்டல் பரீட்சை 2017, திசெம்பர் மாதம் கொழும்பில் நடைபெறும் என இத்தால் அறிவிக்கப்படுகின்றது.

2. இப்பரீட்சைக்குரிய பாடவிதானம் மற்றும் ஏனைய ஒழுங்கு விதிகள் இலக்கம் 1885/ 31 கொண்ட 2014.10.22 ஆம் திகதிய இலங்கைச் சனநாயக சோசலிசக் குடியரசின் அதிவிசேட வர்த்தமானி அறிவித்தலில் பிரசுரிக்கப்பட்டுள்ளது. விண்ணப்பதாரர்களின் வசதிக்காக பாடவிதானம் மற்றும் ஏனைய ஒழுங்குவிதிகள் கீழே குறிப்பிடப்பட்டுள்ளன :

(அ) ***பரீட்சை ஒழுங்கு விதிகள்.***- வினைத்திறன்காண் தடை தாண்டல் பரீட்சையின் பாடங்கள் கீழே குறிப்பிடப்பட்டுள்ளன :

(i) விடய இல. 01 - பாடசாலை நிருவாகம் மற்றும் மேற்பார்வை : 100 புள்ளிகள் - 3 மணித்தியாலம்

(ii) விடய இல. 02 - பாடசாலைத் திட்டமிடல் : 100 புள்ளிகள் - 3 மணித்தியாலம்

(iii) விடய இல. 03 - கல்வியின் புதிய முன்னேற்றங்கள் மற்றும் செயற்பாடுகள் : 100 புள்ளிகள் - 3 மணித்தியாலம்

**பாட விதானம் :**

(i) ***பாடசாலை நிருவாகம் மற்றும் மேற்பார்வை.***- பாடசாலை ஒன்றின் சிறந்த நிருவாகத்திற்காக அதிபரின் செயற்பாட்டுப் பணிகள் தொடர்பில் பரீட்சார்த்தியின் அறிவு மற்றும் விளக்கத்தை பரிசீலனை செய்வதற்கான கேள்விகள் இதில் அடங்கியுள்ளன. பாடசாலை முகாமைத்துவ முறைகள், நேரசூசியைத் தயாரித்தல், பொறுப்புக்களைப் பகிர்தல், பாடசாலை அபிவிருத்திக்காக மக்கள் பங்கேற்பு, பாடசாலையை அடிப்படையாகக் கொண்ட முகாமைத்துவம், பாடசாலையை அடிப்படையாகக் கொண்ட ஆசிரியர் அபிவிருத்தி, ஆசிரியர் நலன்புரி, மாணவர்களுக்குப் பொருத்தமான பாடசாலை சார்ந்த சிந்தனைகள், பாடசாலையைக் கேந்திரமாக் கொண்ட கல்வி ஆகிய துறைகள் தொடர்பில் அறிவு மதிப்பீடு செய்யப்படும்.

(ii) ***பாடசாலைத் திட்டமிடல்.***- அபிவிருத்தியின் முன்னோடியான அதிபர்களின் செயற்பாடுகள் தொடர்பில் பரீட்சார்த்தியின் அறிவு மற்றும் விளக்கத்தைப் பரீட்சிப்பதற்கான கேள்விகள் உள்ளடங்கியுள்ளன. பாடசாலை முகாமைத்துவ சபை, பாடசாலை நோக்கு மற்றும் பணிகள், பாடசாலைத் தகவலை அடிப்படையினை வகுத்தல், இணைந்த திட்டங்கள், நீண்ட கால மற்றும் குறுகிய காலத் திட்டங்கள், வருடாந்தம் அமுல்படுத்தும் திட்டங்கள், பாடசாலை வலையமைப்பு மற்றும் வளத் திட்டமிடல், பிரதேச அபிவிருத்திக்கு பாடசாலையின் பங்களிப்பு ஆகிய துறைகள் தொடர்பான அறிவு மதிப்பீடு செய்யப்படும்.

(iii) ***கல்வியின் புதிய முன்னேற்றங்கள் மற்றும் செயற்பாடுகள்.***- கற்றல் மற்றும் கற்பித்தல் தொடர்பான புதிய சிந்தனைகள், அனுபவங்கள் ஊடாக கற்றல், தர்க்க ரீதியலான சிந்தனைகள், கல்வியின் சமநிலை, விசேட தேவைகள் கொண்டோருக்கான கல்வி, முறைசாராக் கல்வி, முதியோர் கல்வி, ஆயுட்கால கல்வி, திறனை அடிப்படையாகக் கொண்ட கல்வி, வாழ்வதற்கான கல்வி, மாணவர் ஆலோசனை மற்றும் தொழில்சார் வழிகாட்டல் ஆகிய விடயங்கள் தொடர்பிலான அறிவு கருத்திற் கொள்ளப்படும்.

3. சித்தியடைவதற்காக பரீட்சார்த்தி விண்ணப்பிக்கும் ஒவ்வொரு பாடத்திலும் குறைந்தபட்சம் 40% அல்லது அதற்குக் கூடுதலான புள்ளிகளை பெற்றிருக்க வேண்டும். பரீட்சைக்குத் தோற்றும் சகல விண்ணப்பதாரர்களுக்கும் பெறுபேறுகள் தனிப்பட்ட ரீதியில் அறிவிக்க அல்லது இலங்கை பரீட்சைத் திணைக்களத்தின் www.results.exams.gov.lk இணையத்தளம் ஊடாக வெளியிட பரீட்சைத் திணைக்களத்தினால் நடவடிக்கை எடுக்கப்படும்.

4. **பரீட்சையின் மொழி மூலம்.**- சிங்களம்/ தமிழ் (விண்ணப்பிக்கப்பட்ட மொழியினை பின்னர் மாற்றியமைக்க இடமளிக்கப்பட மாட்டாது)

5. பரீட்சார்த்தி தமக்குரியதல்லாத மொழிமூலம் பரீட்சைக்குத் தோற்றுவதாக தெரியவரும் பட்சத்தில் அவரது பரீட்சார்த்தி அந்தஸ்து இரத்துச் செய்யப்படும்.

5.1 பரீட்சைக்கு தோற்றும் சகல விண்ணப்பதாரிகளினதும் பெறுபேறுகள் கொண்ட பெறுபேறு ஆவணம் செயலாளர், கல்வி அமைச்சிற்கு அனுப்பப்படும். பரீட்சார்த்திகளுக்கு தனிப்பட்ட ரீதியில் பெறுபேறுகளை அனுப்ப பரீட்சை ஆணையாளர் நாயகத்தினால் நடவடிக்கை எடுக்கப்பட மாட்டாது.

6. இவ்வறிவித்தலில் குறிப்பிடப்பட்டுள்ள மாதிரிப் படிவத்திற்கமைய விண்ணப்பப்படிவத்தின் தலைப்பு

இல. 01 தொடக்கம் 06 வரை முதலாவது பக்கத்திலும் எஞ்சியவை இரண்டாவது பக்கத்திலுமாக தயாரிக்க வேண்டியதுடன் அதற்குரிய தகவல்களை தமது கையெழுத்தில் தெளிவாக உள்ளடக்க வேண்டும். மாதிரி விண்ணப்பப்படிவத்திற்கு ஒவ்வாத விண்ணப்பப்படிவங்கள் முன்னறிவித்தலின்றி நிராகரிக்கப்படும். பூரணப்படுத்தப்பட்ட விண்ணப்பப்படிவத்தின் போட்டோப் பிரதி மற்றும் பரீட்சைக் கட்டணத்திற்குரிய பற்றுச்சீட்டின் போட்டோப் பிரதியை வைத்திருப்பது பயன்மிக்கதாக அமையும் என்பதை அறியத்தருகிறேன். மேலும் பூரணப்படுத்தப்படும் விண்ணப்பப்படிவம் பரீட்சை அறிவித்தலில் குறிப்பிடப் பட்டுள்ள மாதிரிப் படிவத்திற்கமைவானதா என்பது குறித்து விண்ணபதாரி விளக்கம் பெற்றிருக்க வேண்டும். அவ்வாறின்றேல் விண்ணப்பப்படிவம் நிராகரிக்கப்படும் என்பதையும் மேலும் அறியத்தருகிறேன். விண்ணப்பப்படிவத்தை தயாரிக்கும்போது அவ் விண்ணப்பப்படிவத்தில் குறிப்பிடப்பட்டுள்ள பரீட்சையின் பெயரை சிங்கள விண்ணப்பப்படிவங்களில் சிங்களத்திற்கு மேலதிகமாக ஆங்கிலத்திலும் தமிழ் விண்ணப்பப்படிவங்களில் தமிழுக்கு மேலதிகமாக ஆங்கிலத்திலும் குறிப்பிடுவது அவசியம் என்பதை அறியத்தருகிறேன்.

(***போலித் தகவல்களுக்கான தண்டனை.***- விண்ணப்பப் படிவத்தை நிரப்பும்போது மிகக் கவனத்துடன் சரியான தகவல்களை வழங்க வேண்டும். இப்பரீட்சையின் சட்ட ஒழுங்கு விதிமுறைகளுக்கமைய பரீட்சாத்தி தகைமையற்றவர் எனத் தெரியவரும் பட்சத்தில் பரீசைக்கு முன்னர் அல்லது பரீட்சை நடைபெறும் வேளையில் அல்லது பரீட்சைக்குப் பின்னர் எந்தவொரு சந்தர்ப்பத்திலும் அவரது பரீட்சார்த்தி அந்தஸ்தை இரத்துச் செய்ய முடியும்.)

7. பரீட்சை ஆணையாளர் நாயகத்தினால் பரீட்சை நடாத்தப்படுவதுடன் அதனை நடாத்துவதற்காக அவரினால் விடுவிக்கப்பட்டுள்ள சட்ட ஒழுங்குகளை பின்பற்ற பரீட்சார்த்தி கட்டுப்பட்டுள்ளார். பரீட்சைக்கான சட்ட ஒழுங்குகள் இவ்வறி வித்தலின் இறுதியில் பிரசுரிக்கப்பட்டுள்ளன.

8. விண்ணப்பப்படிவத்தை 2017, செத்தெம்பர் மாதம் 12 ஆந் திகதி அல்லது அதற்கு முன்னர் "பரீட்சை ஆணையாளர் நாயகம், ஒழுங்கமைப்பு மற்றும் வெளிநாட்டுப் பரீட்சைக் கிளை, இலங்கை பரீட்சைத் திணைக்களம், தபால்பெட்டி இலக்கம் 1503, கொழும்பு" என்ற முகவரிக்கு கிடைக்கக்கூடியவாறு கோட்டக் கல்விப் பணிப்பாளர்/வலயக் கல்விப் பணிப்பாளர் அல்லது மேலதிக மாகாணக் கல்விப் பணிப்பாளர்/மாகாணக் கல்விப் பணிப்பாளர் ஊடாக அல்லது தங்களது சேவைப் பொறுப்பாளரினால் பதிவுத் தபால் மூலம் அனுப்ப வேண்டும். அன்றைய தினத்திற்கு பின்னர் அனுப்பப்படும் விண்ணப்பப்படிவங்கள் நிராகரிக்கப்படும்.

9. வர்த்தமானி அறிவித்தலில் குறிப்பிடப்பட்டுள்ள தகைமை களைக் கொண்டோர் மாத்திரம் விண்ணப்பித்துள்ளதாக ஆரம்பத் தீர்மானத்திற்கமைய அறிவித்தலில் குறிப்பிடப் பட்டுள்ள விண்ணப்பப்படிவத்தை ஏற்றுக்கொள்ளும் இறுதித் திகதி அல்லது அதற்கு முன்னர் பரீட்சைக் கட்டணத்தை செலுத்தி அதற்குரிய பற்றுச்சீட்டுடன் சரியாகப் பூர்த்திசெய்து அனுப்பியுள்ள விண்ணப்பதாரர்களுக்கு பரீட்சை ஆணையாளர் நாயகத்தினால் பரீட்சைக்குரிய அனுமதிப்பத்திரங்கள் அனுப்பப்படும். விண்ணப்பதாரர்களுக்கு அனுமதிப்பத்திரம் அனுப்பப்பட்டவுடன் அதுதொடர்பாகக் குறிப்பிட்டு பத்திரிகை அறிவித்தல் இலங்கைப் பரீட்சைத் திணைக்களத்தினால் பிரசுரிக்கப்படும். அறிவித்தல் வெளியிடப்பட்டு 02 அல்லது 03 நாட்களில் அனுமதிப்பத்திரம் கிடைக்காத பட்சத்தில் அது தொடர்பாக அறிவித்தலில் குறிப்பிடப்பட்டவாறு இலங்கைப் பரீட்சைத் திணைக்கத்திற்கு அறிவிக்க வேண்டும். அவ்வாறு அறிவிக்கும் போது விண்ணப்பதாரியின் முழுப்பெயர், முகவரி, தேசிய அடையாள அட்டை இலக்கம் மற்றும் விண்ணப்பித்த பரீட்சையின் பெயரைக் குறிப்பிட வேண்டும். கொழும்பிற்கு வெளியிலுள்ள விண்ணப்பதாரியாயின் அவ் விபரங்களுடன் பிரவேச அனுமதிப்பத்திரத்தில் பிரதியை அனுப்புவதற்குரிய பெக்ஸ் இலக்கத்துடன் கோரிக்கை கடிதத்தை பெக்ஸ் மூலம் அனுப்பி இது தொடர்பான தகவல்களை பெற்றுக்கொள்வது பயன்மிக்கதாக அமையும். பரீட்சைத் திணைக்களத்துடன் தொடர்பு கொள்ளும் வேளையில் தேவையாயின் விண்ணப்பதாரியின் பரீட்சார்த்தி அந்தஸ்தினை உறுதிப்படுத்துவதற்காக விண்ணப்பப்படிவத்தின் போட்டோப் பிரதி, பரீட்சைக் கட்டணம் கொடுப்பனவிற்கு உரியதாயின் அதற்கான பற்றுச்சீட்டுப் பிரதியும் விண்ணப்பப் படிவத்தை தபாலில் அனுப்பும் போது பதிவு செய்யப்பட்ட பற்றுச் சீட்டினையும் தயாராக வைத்திருப்பது பயன்மிக்கதாகும். பரீட்சாத்திக்கு பரீட்சை அனுமதிப் பத்திரத்தினை வழங்குவது பரீட்சைக்கு தோற்றுவதற்கு சகல தகைமைகளையும் பூர்த்தி செய்வதாக ஏற்றுக்கொண்டல்ல என்பதனை கருத்தில் கொள்ள வேண்டும்.

10. (i) விண்ணப்பப்படிவத்திலும் பரீட்சைக்கான அனுமதிப் பத்திரத்திலும் பரீட்சார்த்தியின் ஒப்பம் நிறுவனப் பொறுப்பாளர் அல்லது அவரினால் அதிகாரம் வழங்கப்பட்ட உத்தியோகத்தர் ஊடாக உறுதிப்படுத்தப்பட வேண்டும். பரீட்சார்த்தி தமக்கு பணிக்கப்பட்டுள்ள பரீட்சை மண்டபத்தில் உரிய பரீட்சை இலக்கத்தின் கீழ் பரீட்சைக்குத் தோற்ற வேண்டும். பரீட்சைக்குத் தோற்றும் சகல பரீட்சார்த்திகளும் பரீட்சையின் முதலாவது தினத்தில் தமது ஒப்பத்தை உறுதிப்படுத்திய பரீட்சை அனுமதிப்பத்திரத்தை மண்டபப் பொறுப்பாளருக்கு கையளிக்க வேண்டும். தமது அனுமதிப்பத்திரத்தை சமர்ப்பிக்காத விண்ணபதாரிக்கு பரீட்சைக்குத் தோற்ற அனுமதி வழங்கப்படமாட்டாது.

(ii) மேற்கூறப்பட்ட 08 ஆவது வாசகத்தில் குறிப்பிடப்பட்ட தேவைகளை நிறைவேற்றத் தவறும் பரீட்சார்த்தியின் (பின்னர் சமர்ப்பிக்கப்படும்) முறைப்பாடுகள் கருத்திற் கொள்ளப்படமாட்டாது.

11. பரீட்சை மண்டபத்தில் தமது அடையாளத்தை உறுதிப் படுத்துவதற்காக சாட்சி சமர்ப்பிப்பது பரீட்சார்த்தியின் பொறுப் பாகும். அதற்காக-

(i) ஆட்பதிவுத் திணைக்களத்தினால் வழங்கப்பட்ட தேசிய ஆள் அடையாள அட்டை ; அல்லது

(ii) செல்லுபடியாகும் கடவுச்சீட்டு மாத்திரம் ஏற்றுக் கொள்ளப்படும்.

12. **பரீட்சைக் கட்டணம் :**

(அ) இப்பரீட்சைக்காக அறவிடப்படும் கட்டணங்கள் எக்காரணம் கொண்டும் மீளச்செலுத்தப்பட மாட்டாது என்பதுடன் வேறு எந்தவொரு பரீட்சைக் கட்டணத்திற்காகவும் மாற்ற இடமளிக் கப்படமாட்டாது ;

(ஆ) முழுமையான பரீட்சை அல்லது அதில் ஒரு பகுதிக்காக முதற்தடவையில் கட்டணம் அறவிடப்படமாட்டாது ;

(இ) அதற்குப் பின்னர் அவ்வவ் தடவைகளுக்காக அறவிடப்படும் கட்டணம் கீழே குறிப்பிடப் பட்டுள்ளது :

முழுமையான பரீட்சைக் கட்டணம் : ரூ.500/-
ஒரு பாடத்திற்காக : ரூ.250/-

இப்பரீட்சைக் கட்டணம் பரீட்சை ஆணையாளர் நாயகத்தின் வருமானத் தலைப்பிற்கு 2003-02-13ல் வைப்பிலிடக்கூடிவாறு நாட்டில் அமைந்துள்ள எந்தவொரு தபால் அல்லது உப தபால் அலுவலகத்திற்கு செலுத்திப் பெற்றுக்கொள்ளப்பட்ட பற்றுச்சீட்டினை விண்ணப்பப்படிவத்தில் உரிய இடத்தில் கழராது ஒட்டி அனுப்ப வேண்டும். பற்றுச்சீட்டின் போட்டோப் பிரதியினை வைத்திருப்பது பயன்மிக்கதாகும் பரீட்சைக் கட்டணத்திற்காக காசுக் கட்டளை அல்லது முத்திரை பொறுப்பேற்கப்படமாட்டாது.

13. பரீட்சை நடாத்துவது மற்றும் பெறுபேறுகளை வெளியிடுவது தொடர்பாக பரீட்சை ஆணையாளர் நாயகத்தி னால் விதிக்கப்படும் சட்ட ஒழுங்குகளுக்கு பரீட்சார்த்தி கட்டுப்படவேண்டும். இச்சட்டங்களை மீறும்பட்சத்தில் பரீட்சை ஆணையாளர் நாயகத்தினால் விதிக்கப்படும் தண்டனைக்கு அவர் உட்படவேண்டும் என்பதனை அறியத்தருகிறேன்.

14. இங்கு சிங்களம், தமிழ் மற்றும் ஆங்கில மொழி மூலம் பிரசுரிக்கப்படும் அறிவித்தலில் வாசகங்களில் ஏதேனும் ஒவ்வாமை அல்லது தொடர்பின்மைகள் காணப்படும் பட்சத்தில் சிங்கள மொழி மூலமான அறிவித்தலே அமுலில் இருக்கும்.

15. இவ்வறிவித்தல் மூலம் வெளிப்படுத்தப்படாத ஏதேனும் விடயங்கள் இருப்பின் அது தொடர்பாக தீர்மானம் எடுக்கும் உரிமை கல்வி அமைச்சின் செயலாளருக்குரியதாகும்.

சுனில் ஹெட்டிஆரச்சி,
செயலாளர்,
கல்வி அமைச்சு.

கல்வி அமைச்சு,
இசுருபாய,
பலவத்தை.

மாதிரி விண்ணப்பப்படிவம்

**இலங்கை அதிபர் சேவையின் 2 ஆம் வகுப்பின் உத்தியோகத்தர்களுக்கான வினைத்திறன்காண் தடைதாண்டல் பரீட்சை - 2017**

Efficiency Bar Examination for officers in class 2 in Sri Lanka Principals service - 2017

(கோட்ட/ வலயக் கல்விப் பணிப்பாளர்/ மேலதிக மாகாணக் கல்விப் பணிப்பாளர்/ மாகாணக் கல்விப் பணிப்பாளர் ஊடாக பரீட்சை ஆணையாளர் நாயகம், ஒழுங்கமைப்பு மற்றும் வெளிநாட்டுப் பரீட்சைக் கிளை, இலங்கைப் பரீட்சைத் திணைக்களம், தபால்பெட்டி இலக்கம் 1503, கொழும்பு என்ற முகவரிக்கு பதிவுத்தபாலில் அனுப்பவும். பரீட்சையின் பெயரை கடித உறையின் இடதுபக்க மேல் மூலையில் குறிப்பிட வேண்டும்.)

1. பரீட்சைக்குத் தோற்றும் மொழி :
சிங்களம் - 2
தமிழ் - 3 ☐
(உரிய இலக்கத்தைக் கூட்டினுள் குறிப்பிடுக.)

2. (i) முழுப் பெயர் (ஆங்கில கெப்பிடல் எழுத்தில்) : ----.
(உ+ம் : HERATH MUDIYANSELAGE SAMAN KUMARA GUNAWARDHANA)

(ii) முதலெழுத்துக்கள் இறுதியில் வரக்கூடியவாறு முதலெழுத்துக்களுடன் பெயர் (ஆங்கில கெப்பிடல் எழுத்தில்) :----.
(உ-ம் : GUNAWARDHANA, H.M.S.K)

(iii) முழுப் பெயர் (சிங்களத்தில்/ தமிழில்) :----.

3. முகவரி :

(i) சொந்த :----.
(ii) அலுவலகம் :----.
(iii) அனுமதிப்பத்திரம் அனுப்பவேண்டிய முகவரி (ஆங்கிலக் கெப்பிடல் எழுத்தில்):----.
(iv) தொலைபேசி இலக்கம் (அலுவலகம்) :----.

4. (i) அதிபர் சேவையின் வகுப்பு/ தரம் :----.
(ii) பாடசாலை/ அலுவலகம் :----.
(iii) மாகாணக் கல்வித் திணைக்களம்/ வலயக் கல்வி அலுவலகம் :----.

5. (i) தேசிய அடையாள அட்டை இல :

| | | | | | | | | | |
|---|---|---|---|---|---|---|---|---|---|
| | | | | | | | | | |

(ii) பிறந்த திகதி :

வருடம் [ ][ ][ ][ ] மாதம் [ ][ ] திகதி [ ][ ]

(iii) பால் (ஆண்/பெண்) :
ஆண் - 0
பெண் - 1 [ ]
(உரிய இலக்கத்தைக் கூட்டினுள் குறிப்பிடவும்)

6. வர்த்தமானி அறிவித்தலின் 02 ஆம் பந்தியின் (அ) இன் கீழ் குறிப்பிடப்பட்டுள்ள பாட இலக்கத்துடன் விண்ணப்பிக்கும் பாடங்கள்.

| | |
|---|---|
| பாட இல 01 - பாடசாலை நிருவாகம் மற்றும் மேற்பார்வை | |
| பாட இல 02 - பாடசாலைத் திட்டமிடல் | |
| பாட இல 03 - கல்வியின் புதிய முன் னேற்றங்கள் மற்றும் செயற்பாடுகள் | |

(உரிய பாட இலக்கத்தைக் கூட்டினுள் இடவும்.)

7. இதற்கு முன்னர் இலக்கம் 1086/26 மற்றும் 1999.07.02 ஆம் திகதிய இலங்கை அதிபர் சேவையின் பிரமாணக் குறிப்பிற்கமைய இடம்பெற்ற வினைத்திறன் தடைதாண்டல் பரீட்சையில் பாடசாலையின் நிருவாகம் மற்றும் மேற்பார்வை பாடத்தில் சித்தியடைந்த உத்தியோகத்தர்கள் கல்வி அமைச்சின் சுற்றறிக்கை இலக்கம் 33/2014 இற்கமைய இவ் இரண்டாவது வினைத்திறன்காண் தடைதாண்டலில் பாடசாலை நிருவாகம் மற்றும் மேற்பார்வைப் பாடத்தில் சித்தியடையும் தேவையிலிருந்து விடுவிக்கப்படுவர். இப்பாடத்தில் சித்தியடைவதாயின் ஆண்டு, சித்தி மற்றும் மொழியைக் குறிப்பிடவும்.

| பாடம் | பாட இலக்கம் | சித்தி | மொழி மூலம் |
|---|---|---|---|
| பாடசாலை நிருவாகம் மற்றும் மேற்பார்வை | | | |

8. பரீட்சைக் கட்டணம்:-
(i) செலுத்தப்பட்ட தபால்/ உபதபால் அலுவலகம் : ----.
(ii) செலுத்தப்பட்ட தொகை :----.
(iii) செலுத்திய திகதி :----.
(iv) பற்றுச் சீட்டு இல :----.

| பற்றுச்சீட்டைக் கழராது இங்கே ஒட்டவும். (பற்றுசீட்டின் பிரதியை வைத்திருப்பது பயன்மிக்கதாகும்) |
|---|

9. மேற்கூறப்பட்ட தகவல்கள் உண்மையானதும் சரியானதும் என உறுதிசெய்கிறேன். மேலும் பரீட்சையை நடாத்துதல் மற்றும் பெறுபேறுகளை வெளியிடுவது தொடர்பில் பரீட்சை ஆணையாளர் நாயகத்தினால் விதிக்கப்படும் சட்ட ஒழுங்குகளுக்கு நான் கட்டுப்படுகிறேன்.

----,
விண்ணப்பதாரியின் கையொப்பம்.

திகதி :----.

10. பரீட்சை ஆணையாளர் நாயகம் :

மேலே குறிப்பிடப்பட்டுள்ள பரீட்சார்த்தி எனது கோட் டத்தின்/ வலயத்தின்/ மாகாணத்தின் உத்தியோகத்தர் என உறுதிப்படுத்துகிறேன். மேலும் பரீட்சார்த்தி பரீட்சைக் கட்டணத்தில் இருந்து விடுவிக்கப்பட்டுள்ளார்/ பரீட்சார்த்தி பரீட்சைக் கட்டணத்திற்கான பற்றுச்சீட்டை உரியவாறு ஒட்டியுள்ளதாகவும் உறுதி செய்கிறேன்.

கோட்ட/ வலயக் கல்விப் பணிப்பாளர்/
மேலதிக மாகாணக் கல்விப் பணிப்பாளர்/
மாகாணக் கல்விப் பணிப்பாளரின்
கையொப்பம்.

முகவரி :----.
(பதவி முத்திரையுடன் உறுதிப்படுத்தவும்)
(பொருத்தமற்ற சொற்களை நீக்கவும்)
திகதி :----.

8-436/ 1

---

## கல்வி அமைச்சு

### இலங்கை அதிபர் சேவையின் 3 ஆம் வகுப்பின் உத்தியோகத்தர்களுக்கான வினைத்திறன்காண் தடைதாண்டல் பரீட்சை – 2017

இலக்கம் 1885/31 மற்றும் 2014.10.22 ஆம் திகதிய இலங்கை அதிபர் சேவை பிரமாணக் குறிப்பிற்கு அமைய இலங்கை அதிபர் சேவையின் 3 ஆம் வகுப்பின் உத்தி யோகத்தர்களுக்கான வினைத்திறன்காண் தடைதாண்டல் பரீட்சை 2017, திசெம்பர் மாதம் கொழும்பில் நடைபெறும் என இத்தால் அறிவிக்கப்படுகின்றது.

2. இப்பரீட்சைக்குரிய பாடவிதானம் மற்றும் ஏனைய ஒழுங்கு விதிகள் இலக்கம் 1885/ 31 கொண்ட

2014.10.22 ஆம் திகதிய இலங்கைச் சனநாயக சோசலிசக் குடியரசின் அதிவிசேட வர்த்தமானி அறிவித்தலில் பிரசுரிக்கப்பட்டுள்ளது. விண்ணப்பதாரர்களின் வசதிக்காக பாடவிதானம் மற்றும் ஏனைய ஒழுங்குவிதிகள் கீழே குறிப்பிடப்பட்டுள்ளன :

(அ) **பரீட்சை ஒழுங்கு விதிகள்**.- வினைத்திறன்காண் தடை தாண்டல் பரீட்சையின் பாடங்கள் கீழே குறிப்பிடப்பட்டுள்ளன :

(i) பாட இல. 01 - தாபன விதிக்கோவையின் ஒழுங்கு விதிமுறைகள் மற்றும் அரச சேவை ஆணைக்குழுவின் செயற்பாட்டு ஒழுங்கு விதிமுறைகள் :
100 புள்ளிகள் - 2 மணித்தியாலம்

(ii) பாட இல. 02 - பாடசாலையின் நிதி நிருவாகம் மற்றும் நிதி ஒழுங்குக்கோவை :
100 புள்ளிகள் - 2 மணித்தியாலம்

**பாட விதானம்** :

(i) தாபன விதிக் கோவையின் ஒழுங்கு விதிமுறைகள் மற்றும் அரச சேவை ஆணைக்குழுவின் செயற்பாட்டு ஒழுங்கு விதிமுறைகள் - தாபன விதிக் கோவையின் வாசகங்களும் VII,VIII, IX, X, XI, XXIII, XXV, XXVI, XXVII, XXVIII, XXIX,XXX, XXXI, XXXII, XXXIII, XLVII, XLVIII வாசகங்கள் மற்றும் அரச சேவை ஆணைக்குழு சபையின் செயற்சாதனை ஒழுங்கு விதிகள் தொடர்பிலான அறிவு பரிசீலனை செய்யப்படும்.

(ii) பாடசாலைகளின் நிதி நிருவாகம் மற்றும் நிதி ஒழுங்குக் கோவை -
வரவு செலவுத் திணைக்களத்தின் நிதி நிருவாகம் மற்றும் நிதிப் பொறுப்புக்களை கையளித்தல், நிதிப் பொறுப்பேற்பினை கணக்குகளில் பதிதல் மற்றும் மீள் கட்டமைப்புக் கொடுப்பனவு, அரச நிதியைப் பொறுப்பேற்றல், கட்டுநிதி மற்றும் வங்கிக் கடன் பணிகள் மற்றும் சேவைகள், பொருள் ஆய்வு, கணக்காய்வு, அரச அலுவலகங்களில் பயன்படுத்தப்படும் நாளேடு, வருமான மற்றும் செலவினச் சுருக்கம், வங்கி இணக்கக்கூற்று, செலுத்தப்படாத கொடுப்பனவு, கடமைத் தொலைபேசி தொடர்பாக வெளியிடப்பட்டுள்ள சுற்றறிக்கை மற்றும் நிதி ஒழுங்குக் கோவைகள் தொடர்பான பொது விளக்கம் பரிசீலனை செய்யப்படும்.

3. சித்தியடைவதற்காக பரீட்சார்த்தி விண்ணப்பிக்கும் ஒவ்வொரு பாடங்களில் குறைந்தபட்சம் 40% அல்லது அதற்குக் கூடுதலான புள்ளிகளை பெற்றிருக்க வேண்டும். பரீட்சைக்குத் தோற்றும் சகல விண்ணப்பதாரர்களுக்கும் பெறுபேறுகள் தனிப்பட்ட ரீதியில் அறிவிக்க அல்லது இலங்கை பரீட்சைத் திணைக்களத்தின் www.results.exams.gov.lk இணையத்தளம் ஊடாக வெளியிட பரீட்சைத் திணைக்களத்தினால் நடவடிக்கை எடுக்கப்படும்.

4. **பரீட்சையின் மொழி மூலம்**.- சிங்களம்/ தமிழ் (விண்ணப்பிக்கப்பட்ட மொழியினை பின்னர் மாற்றியமைக்க இடமளிக்கப்படமாட்டாது.)

5. பரீட்சார்த்தி தமக்குரியதல்லாத மொழிமூலம் பரீட்சைக்குத் தோற்றுவதாக தெரியவரும் பட்சத்தில் அவரது பரீட்சார்த்தி அந்தஸ்து இரத்துச் செய்யப்படும்.

5.1 பரீட்சைக்கு தோற்றும் சகல விண்ணப்பதாரிகளினதும் பெறுபேறுகள் கொண்ட பெறுபேறு ஆவணம் செயலாளர், கல்வி அமைச்சிற்கு அனுப்பப்படும். பரீட்சார்த்திகளுக்கு தனிப்பட்ட ரீதியில் பெறுபேறுகளை அனுப்ப பரீட்சை ஆணையாளர் நாயகத்தினால் நடவடிக்கை எடுக்கப்படமாட்டாது.

6. இவ்வறிவித்தலில் குறிப்பிடப்பட்டுள்ள மாதிரிப் படிவத்திற்கமைய விண்ணப்பப்படிவத்தின் தலைப்பு இல. 01 தொடக்கம் 06 வரை முதலாவது பக்கத்திலும் எஞ்சியவை இரண்டாவது பக்கத்திலுமாக தயாரிக்க வேண்டியதுடன் அதற்குரிய தகவல்களை தமது கையெழுத்தில் தெளிவாக உள்ளடக்க வேண்டும். மாதிரி விண்ணப்பப்படிவத்திற்கு ஒவ்வாத விண்ணப்பப்படிவங்கள் முன்னறிவித்தலின்றி நிராகரிக்கப்படும். பூரணப்படுத்தப்பட்ட விண்ணப்பப்படிவத்தின் போட்டோப் பிரதி மற்றும் பரீட்சைக் கட்டணத்திற்குரிய பற்றுச்சீட்டின் போட்டோப் பிரதியை வைத்திருப்பது பயன்மிக்கதாக அமையும் என்பதை அறியத்தருகிறேன். மேலும் பூரணப்படுத்தப்படும் விண்ணப்பப்படிவம் பரீட்சை அறிவித்தலில் குறிப்பிடப் பட்டுள்ள மாதிரிப் படிவத்திற்கமைவானதா என்பது குறித்து விண்ணப்பதாரி விளக்கம் பெற்றிருக்க வேண்டும். அவ்வாறின்றேல் விண்ணப்பப்படிவம் நிராகரிக்கப்படும் என்பதையும் மேலும் அறியத்தருகிறேன். விண்ணப்பப்படிவத்தை தயாரிக்கும்போது அவ் விண்ணப்பப்படிவத்தில் குறிப்பிடப்பட்டுள்ள பரீட்சையின் பெயரை சிங்கள விண்ணப்பப்படிவங்களில் சிங்களத்திற்கு மேலதிகமாக ஆங்கிலத்திலும் தமிழ் விண்ணப்பப்படிவங்களில் தமிழுக்கு மேலதிகமாக ஆங்கிலத்திலும் குறிப்பிடுவது அவசியம் என்பதை அறியத்தருகிறேன்.

(**போலித் தகவல்களுக்கான தண்டனை**.- விண்ணப்பப் படிவத்தை நிரப்பும்போது மிகக் கவனத்துடன் சரியான தகவல்களை வழங்க வேண்டும். இப்பரீட்சையின் சட்ட ஒழுங்கு விதிமுறைகளுக்கமைய பரீசாத்தி தகைமையற்றவர் எனத் தெரியவரும் பட்சத்தில் பரீசைக்கு முன்னர் அல்லது பரீட்சை நடைபெறும் வேளையில் அல்லது பரீட்சைக்குப் பின்னர் எந்தவொரு சந்தர்ப்பத்திலும் அவரது பரீட்சார்த்தி அந்தஸ்தை இரத்துச் செய்ய முடியும்)

7. பரீட்சை ஆணையாளர் நாயகத்தினால் பரீட்சை நடாத்தப்படுவதுடன் அதனை நடாத்துவதற்காக அவரினால் விடுவிக்கப்பட்டுள்ள சட்ட ஒழுங்குகளை பின்பற்ற பரீட்சார்த்தி கட்டுப்பட்டுள்ளார். பரீட்சைக்கான சட்ட ஒழுங்குகள் இவ்வறிவித்தலின் இறுதியில் பிரசுரிக்கப்பட்டுள்ளன.

8. விண்ணப்பப்படிவத்தை 2017, செத்தெம்பர் 12 ஆந் திகதி அல்லது அதற்கு முன்னர் "பரீட்சை ஆணையாளர் நாயகம், ஒழுங்கமைப்பு மற்றும் வெளிநாட்டுப் பரீட்சைக் கிளை, இலங்கை பரீட்சைத் திணைக்களம், தபால்பெட்டி இலக்கம் 1503, கொழும்பு" என்ற முகவரிக்கு கிடைக்கக் கூடியவாறு கோட்டக் கல்விப் பணிப்பாளர்/ வலயக் கல்விப் பணிப்பாளர் அல்லது மேலதிக மாகாணக் கல்விப் பணிப்பாளர்/ மாகாணக் கல்விப் பணிப்பாளர் ஊடாக அல்லது தங்களது சேவைப் பொறுப்பாளரினால் பதிவுத் தபால் மூலம் அனுப்ப வேண்டும். அன்றைய தினத்திற்கு பின்னர் அனுப்பப்படும் விண்ணப்பப்படிவங்கள் நிராகரிக்கப்படும்.

9. வர்த்தமானி அறிவித்தலில் குறிப்பிடப்பட்டுள்ள தகைமைகளைக் கொண்டோர் மாத்திரம் விண்ணப்பித்துள்ளதாக ஆரம்பத் தீர்மானத்திற்கமைய அறிவித்தலில் குறிப்பிடப் பட்டுள்ள விண்ணப்பப்படிவத்தை ஏற்றுக்கொள்ளும் இறுதித் திகதி அல்லது அதற்கு முன்னர் பரீட்சைக் கட்டணத்தை செலுத்தி அதற்குரிய பற்றுச்சீட்டுடன் சரியாகப் பூர்த்திசெய்து அனுப்பியுள்ள விண்ணப்பதாரர்களுக்கு பரீட்சை ஆணையாளர் நாயகத்தினால் பரீட்சைக்குரிய அனுமதிப்பத்திரங்கள் அனுப்பப்படும். விண்ணப்பதாரிகளுக்கு அனுமதிப்பத்திரம் அனுப்பப்பட்டவுடன் அதுதொடர்பாகக் குறிப்பிட்டு பத்திரிகை அறிவித்தல் இலங்கை பரீட்சைத் திணைக்களத்தினால் பிரசுரிக்கப்படும். அறிவித்தல் வெளியிடப்பட்டு 02 அல்லது 03 நாட்களில் அனுமதிப்பத்திரம் கிடைக்காத பட்சத்தில் அது தொடர்பாக அறிவித்தலில் குறிப்பிடப்பட்டவாறு இலங்கைப் பரீட்சைத் திணைக்களத்திற்கு அறிவிக்க வேண்டும். அவ்வாறு அறிவிக்கும்போது விண்ணப்பதாரியின் முழுப்பெயர், முகவரி, தேசிய அடையாள அட்டை இலக்கம் மற்றும் விண்ணப்பித்த பரீட்சையின் பெயரைக் குறிப்பிட வேண்டும். கொழும்பிற்கு வெளியிலுள்ள விண்ணப்பதாரியாயின் அவ் விபரங்களுடன் பிரவேச அனுமதிப்பத்திரத்தில் பிரதியை அனுப்புவதற்குரிய பெக்ஸ் இலக்கத்துடன் கோரிக்கை கடிதத்தை பெக்ஸ் மூலம் அனுப்பி இது தொடர்பான தகவல்களை பெற்றுக்கொள்வது பயன்மிக்கதாக அமையும். பரீட்சைத் திணைக்களத்துடன் தொடர்பு கொள்ளும் வேளையில் தேவையாயின் விண்ணப்பதாரியின் பரீட்சார்த்தி அந்தஸ்தினை உறுதிப்படுத்துவதற்காக விண்ணப்பப்படிவத்தின் போட்டோப் பிரதி, பரீட்சைக் கட்டணம் கொடுப்பனவிற்கு உரியதாயின் அதற்கான பற்றுச்சீட்டுப் பிரதியும் விண்ணப்பப்படிவத்தை தபாலில் அனுப்பும் போது பதிவு செய்யப்பட்ட பற்றுச் சீட்டினையும் தயாராக வைத்திருப்பது பயன்மிக்கதாகும். பரீட்சார்த்திக்கு பரீட்சை அனுமதிப்பத்திரத்தினை வழங்குவது பரீட்சைக்கு தோற்றுவதற்கு சகல தகைமைகளையும் பூர்த்தி செய்வதாக ஏற்றுக்கொண்டல்ல என்பதனை கருத்தில் கொள்ள வேண்டும்.

10. (i) விண்ணப்பப்படிவத்திலும் பரீட்சைக்கான அனுமதிப்பத்திரத்திலும் பரீட்சார்த்தியின் ஒப்பம் நிறுவனப் பொறுப்பாளர் அல்லது அவரினால் அதிகாரம் வழங்கப்பட்ட உத்தியோகத்தர் ஊடாக உறுதிப்படுத்தப்பட வேண்டும். பரீட்சார்த்தி தமக்கு பணிக்கப்பட்டுள்ள பரீட்சை மண்டபத்தில் உரிய பரீட்சை இலக்கத்தின் கீழ் பரீட்சைக்குத் தோற்ற வேண்டும். பரீட்சைக்குத் தோற்றும் சகல பரீட்சார்த்திகளும் பரீட்சையின் முதலாவது தினத்தில் தமது ஒப்பத்தை உறுதிப்படுத்திய பரீட்சை அனுமதிப்பத்திரத்தை மண்டபப் பொறுப்பாளருக்கு கையளிக்க வேண்டும். தமது அனுமதிப்பத்திரத்தை சமர்ப்பிக்காத விண்ணப்பதாரிக்கு பரீட்சைக்குத் தோற்ற அனுமதி வழங்கப்பட மாட்டாது.

(ii) மேற்கூறப்பட்ட 08 ஆவது வாசகத்தில் குறிப்பிடப் பட்ட தேவைகளை நிறைவேற்ற தவறும் பரீட்சார்த்தியின் (பின்னர் சமர்ப்பிக்கப்படும்) முறைப்பாடுகள் கருத்திற் கொள்ளப்படமாட்டாது.

11. பரீட்சை மண்டபத்தில் தமது அடையாளத்தை உறுதிப் படுத்துவதற்காக சாட்சி சமர்ப்பிப்பது பரீட்சார்த்தியின் பொறுப் பாகும். அதற்காக-

(i) ஆட்பதிவுத் திணைக்களத்தினால் வழங்கப்பட்ட தேசிய அடையாள அட்டை ; அல்லது

(ii) செல்லுபடியாகும் கடவுச்சீட்டு மாத்திரம் ஏற்றுக் கொள்ளப்படும்.

12. **பரீட்சைக் கட்டணம் :**

(அ) இப்பரீட்சைக்காக அறவிடப்படும் கட்டணங்கள் எக்காரணம் கொண்டும் மீளச்செலுத்தப்பட மாட்டாது என்பதுடன் வேறு எந்தவொரு பரீட்சைக் கட்டணத்திற்காகவும் மாற்ற இடமளிக் கப்படமாட்டாது.

(ஆ) முழுமையான பரீட்சை அல்லது அதில் ஒரு பகுதிக்காக முதற்தடவையில் கட்டணம் அறவிடப்படமாட்டாது.

(இ) அதற்குப் பின்னர் அவ்வவ் தடவைகளுக்காக அறவிடப்படும் கட்டணம் கீழே குறிப்பிடப் பட்டுள்ளது :

| | |
|---|---|
| முழுமையான பரீட்சைக் கட்டணம் | : ரூ.500/- |
| ஒரு பாடத்திற்காக | : ரூ.250/- |

இப்பரீட்சைக் கட்டணம் பரீட்சை ஆணையாளர் நாயகத்தின் வருமானத் தலைப்பிற்கு 2003-02-13ல் வைப்பிலிடக்கூடிவாறு நாட்டில் அமைந்துள்ள எந்தவொரு தபால் அல்லது உப தபால் அலுவலகத்திற்கு செலுத்தி பெற்றுக்கொள்ளப்பட்ட பற்றுச்சீட்டினை விண்ணப்பப்படிவத்தில் உரிய இடத்தில் கழராது ஒட்டி அனுப்ப வேண்டும். பற்றுச்சீட்டின் போட்டோப் பிரதியினை வைத்திருப்பது பயன்மிக்கதாகும். பரீட்சைக் கட்டணத்திற்காக காசுக் கட்டளை அல்லது முத்திரை பொறுப்பேற்கப்பட மாட்டாது.

*13.* பரீட்சை நடாத்துவது மற்றும் பெறுபேறுகளை வெளியிடுவது தொடர்பாக பரீட்சை ஆணையாளர் நாயகத்தினால் விதிக்கப்படும் சட்ட ஒழுங்குகளுக்கு பரீட்சார்த்தி கட்டுப்படவேண்டும். இச்சட்டங்களை மீறும்பட்சத்தில் பரீட்சை ஆணையாளர் நாயகத்தினால் விதிக்கப்படும் தண்டனைக்கு அவர் உட்படவேண்டும் என்பதனை அறியத்தருகிறேன்.

*14.* இங்கு சிங்களம், தமிழ் மற்றும் ஆங்கில மொழி மூலம் பிரசுரிக்கப்படும் அறிவித்தலில் வாசகங்களில் ஏதேனும் ஒவ்வாமை அல்லது தொடர்பின்மைகள் காணப்படும் பட்சத்தில் சிங்கள மொழி மூலமான அறிவித்தலே அமுலில் இருக்கும்.

*15.* இவ்வறிவித்தல் மூலம் வெளிப்படுத்தப்படாத ஏதேனும் விடயங்கள் இருப்பின் அது தொடர்பாக தீர்மானம் எடுக்கும் உரிமை கல்வி அமைச்சின் செயலாளருக்குரியதாகும்.

சுனில் ஹெட்டிஆரச்சி,
செயலாளர்,
கல்வி அமைச்சு.

கல்வி அமைச்சு,
இசுருபாய,
பலவத்தை.

மாதிரி விண்ணப்பப்படிவம்

**இலங்கை அதிபர் சேவையின் 3 ஆம் வகுப்பின் உத்தியோகத்தர்களுக்கான வினைத்திறன்காண் தடைதாண்டல் பரீட்சை - 2017**

Efficiency Bar Examination for officers in class, 3 in Sri Lanka Principals service - 2017

(கோட்ட/ வலயக் கல்விப் பணிப்பாளர்/ மேலதிக மாகாணக் கல்விப் பணிப்பாளர்/ மாகாணக் கல்விப் பணிப்பாளர் ஊடாக பரீட்சை ஆணையாளர் நாயகம், ஒழுங்கமைப்பு மற்றும் வெளிநாட்டுப் பரீட்சைக் கிளை, இலங்கை பரீட்சைத் திணைக்களம், தபால்பெட்டி இலக்கம் 1503, கொழும்பு என்ற முகவரிக்கு பதிவுத்தபாலில் அனுப்பவும். பரீட்சையின் பெயரை கடித உறையின் இடதுபக்க மேல் மூலையில் குறிப்பிட வேண்டும்.)

1. பரீட்சைக்குத் தோற்றும் மொழி :
   சிங்களம் - 2
   தமிழ் - 3 ☐
   (உரிய இலக்கத்தைக் கூட்டினுள் குறிப்பிடுக.)

2. (i) முழுப் பெயர் (ஆங்கில கெப்பிடல் எழுத்தில்) : ----.
   (உ+ம் : HERATH MUDIYANSELAGE SAMAN KUMARA GUNAWARDHANA)
   (ii) முதலெழுத்துக்கள் இறுதியில் வரக்கூடியவாறு முதலெழுத்துக்களுடன் பெயர் (ஆங்கில கெப்பிடல் எழுத்தில்) :----.
   (உ-ம் : GUNAWARDHANA, H.M.S.K)
   (iii) முழுப் பெயர் (சிங்களத்தில்/ தமிழில்) :----.

3. முகவரி :
   (i) சொந்த :----.
   (ii) அலுவலகம் :----.
   (iii) அனுமதிப்பத்திரம் அனுப்பவேண்டிய முகவரி (ஆங்கிலக் கெப்பிடல் எழுத்தில்):----.
   (iv) தொலைபேசி இலக்கம் (அலுவலகம்) :----.

4. (i) அதிபர் சேவையின் வகுப்பு/ தரம் :----.
   (ii) பாடசாலை/ அலுவலகம் :----.
   (iii) மாகாணக் கல்வித் திணைக்களம்/ வலயக் கல்வி அலுவலகம் :----.

5. (i) தேசிய அடையாள அட்டை இல :

| | | | | | | | | | |
|---|---|---|---|---|---|---|---|---|---|
| | | | | | | | | | |

   (ii) பிறந்த திகதி :

வருடம் ☐☐☐☐ மாதம் ☐☐ திகதி ☐☐

   (iii) பால் (ஆண்/பெண்) :
   ஆண் - 0
   பெண் - 1 ☐
   (உரிய இலக்கத்தைக் கூட்டினுள் குறிப்பிடவும்)

6. வர்த்தமானி அறிவித்தலின் 02 ஆம் பந்தியின் (அ) இன் கீழ் குறிப்பிடப்பட்டுள்ள பாட இலக்கத்துடன் விண்ணப்பிக்கும் பாடங்கள்.

   பாட இல. 01 - தாபன விதிக்கோவையின் ஒழுங்கு விதிமுறைகள் மற்றும் அரச சேவை ஆணைக்குழுவின் செயற்பாட்டு ஒழுங்கு விதிமுறைகள் ☐

   பாட இல. 02 - பாடசாலைகளின் நிதி நிருவாகம் மற்றும் நிதிக்கோவை ☐

   (உரிய பாட இலக்கத்தைக் கூட்டினுள் இடவும்.)

7. பரீட்சைக் கட்டணம்:-
   (i) செலுத்தப்பட்ட தபால்/ உபதபால் அலுவலகம் : ----.
   (ii) செலுத்தப்பட்ட தொகை :----.
   (iii) செலுத்திய திகதி :----.

(iv) பற்றுச் சீட்டு இல. :----.

| |
|---|
| பற்றுச்சீட்டைக் கழராது இங்கே ஒட்டவும். (பற்றுசீட்டின் பிரதியை வைத்திருப்பது பயன்மிக்கதாகும்) |

8. மேற்கூறப்பட்ட தகவல்கள் உண்மையானதும் சரியானதும் என உறுதிசெய்கிறேன். மேலும் பரீட்சையை நடாத்துதல் மற்றும் பெறுபேறுகளை வெளியிடுவது தொடர்பில் பரீட்சை ஆணையாளர் நாயகத்தினால் விதிக்கப்படும் சட்ட ஒழுங்குகளுக்கு நான் கட்டுப்படுகிறேன்.

----,
விண்ணப்பதாரியின் கையொப்பம்.

திகதி :----.

9. பரீட்சை ஆணையாளர் நாயகம் :

மேலே குறிப்பிடப்பட்டுள்ள பரீட்சார்த்தி எனது கோட்டத்தின்/ வலயத்தின்/ மாகாணத்தின் உத்தியோகத்தர் என உறுதிப்படுத்துகிறேன். மேலும் பரீட்சார்த்தி பரீட்சைக் கட்டணத்தில் இருந்து விடுவிக்கப்பட்டுள்ளார்/ பரீட்சார்த்தி பரீட்சைக் கட்டணத்திற்கான பற்றுச்சீட்டை உரியவாறு ஒட்டியுள்ளதாகவும் உறுதி செய்கிறேன்.

கோட்ட/ வலயக் கல்விப் பணிப்பாளர்/
மேலதிக மாகாணக் கல்விப் பணிப்பாளர்/
மாகாணக் கல்விப் பணிப்பாளரின்
கையொப்பம்.

முகவரி :----.
(பதவி முத்திரையுடன் உறுதிப்படுத்தவும்)
(பொருத்தமற்ற சொற்களை நீக்கவும்)
திகதி :----.

8-436/ 2

---

## தொகைமதிப்பு மற்றும் புள்ளிவிபரத் திணைக்களத்தின் புள்ளிவிபர உத்தியோகத்தர் தரம் I இற்கான இரண்டாவது வினைத் திறன்காண் தடைதாண்டல் பரீட்சை - 2013(2017)

## Second Efficiency Bar Examination for Grade I Statistical Officers in the Department of Census and Statistics - 2013(2017)

தொகைமதிப்பு மற்றும் புள்ளிவிபரத் திணைக்களத்தின் புள்ளிவிபர உத்தியோகத்தர் தரம் I பதவிக்கான அங்கீகரிக்கப்பட்ட ஆட்சேர்ப்பு முறை ஏற்பாடுகளின் பிரகாரம் இரண்டாவது வினைத்திறன்காண் தடைதாண்டல் பரீட்சை இலங்கைப் பரீட்சைகள் திணைக்களத்தால் 2017 ஆம் ஆண்டு நவெம்பர் மாதத்தில் நடாத்தப்படுமென இத்தால் அறிவிக்கப்படுகிறது.

2. (i) இப்பரீட்சை, இலங்கைப் பரீட்சைகள் திணைக்களத்தின் பரீட்சைகள் ஆணையாளர் நாயகத்தினால் நடாத்தப்படுவதுடன் பரீட்சையை நடத்துதல், பெறுபேறுகளை வெளியிடுதல் சம்பந்தமாக அவரால் விதிக்கப்பட்ட ஒழுங்குவிதிகளுக்கு பரீட்சார்த்திகள் கீழ்ப்படிதல் வேண்டும். பரீட்சை நடாத்துதல் மற்றும் பெறுபேறு வெளியிடல் சம்பந்தமாக பரீட்சை ஆணையாளர் நாயகத்தின் தீர்மானமே இறுதித் தீர்மானமாகும்.

(ii) பரீட்சார்த்திகளுக்கான விதிமுறைகள், வர்த்தமானியில் பிரத்தியேகமாக அச்சிடப்பட்டுள்ளது. இவ்விதிமுறைகளை மீறுமிடத்து, இலங்கைப் பரீட்சைகள் திணைக்களத்தின் பரீட்சைகள் ஆணையாளர் நாயகத்தினால் விதிக்கப்படும் தண்டனைக்கு ஆளாக நேரிடும்.

3. **பரீட்சைக் கட்டணம்.**- பரீட்சைக்குரிய பாடங்கள் பொருட்டு ஒரே தடவையில் அல்லது வெவ்வேறான இரு தடவைகளில் தோற்ற முடியும். முழுமையாக அல்லது ஒரு பாடத்திற்கு முதல் தடவையாக தோற்றும் பரீட்சார்த்திகளிடமிருந்து பரீட்சைக் கட்டணம் அறவிடப்பட மாட்டாது. அதன் பின்னர் தோற்றும் ஒவ்வொரு தடவையும் ஒரு பாடத்துக்கு 250 ரூபாவும், மொத்தப் பாடங்கள் பொருட்டு 500 ரூபாவும் பரீட்சைக் கட்டணமாக அறவிடப்படும். இப்பரீட்சைக் கட்டணம் பரீட்சைகள் ஆணையாளர் நாயகத்தின் வருமானத் தலைப்பு 2003-02-13 இற்கு வரவு வைக்கும் வகையில் நாட்டின் எந்த ஒரு தபால்/ உப தபால் அலுவலகத்தில் பணத்தைச் செலுத்திப் பெற்றுக்கொண்ட பற்றுச்சீட்டை விண்ணப்பப்படிவத்தின் குறித்தொதுக்கப்பட்ட பகுதியில் கழராதவாறு ஒட்டுதல் வேண்டும். (பற்றுச்சீட்டின் பிரதியை வைத்திருத்தல் பயனுள்ளதாகும்.) பரீட்சைக் கட்டணத்தின் பொருட்டு காசுக் கட்டளை அல்லது முத்திரை ஏற்றுக்கொள்ளப்பட மாட்டாது என்பதுடன், செலுத்தப்பட்ட பணம் எந்தவொரு காரணத்திற்காகவும் மீளச் செலுத்தப்படவோ அல்லது வேறு பரீட்சையின் பொருட்டு மாற்றப்படவோ முடியாது.

4. **விண்ணப்பப்படிவம்.**- விண்ணப்பப்படிவம் இங்கு இணைக்கப்பட்டுள்ள மாதிரிக்கு அமைய இருத்தல் வேண்டும். இவ்விண்ணப்பப்படிவம் ஏ4 தாளின் இரு பக்கங்களையும் பயன்படுத்தி தயாரிக்கப்படுவதுடன் தலைப்பு இல. 1 இலிருந்து 5 வரை முதலாம் பக்கத்திலும் ஏனையவை இரண்டாம் பக்கத்திலும் தயாரிக்கப்படுதலும் வேண்டும். விண்ணப்பம் தயாரிக்கும்போது தலைப்பில் குறிப்பிட்ட பரீட்சையின் பெயரை சிங்கள பரீட்சார்த்திகள் சிங்களத்திற்கு மேலதிகமாக ஆங்கிலத்திலும், தமிழ் பரீட்சார்த்திகள் தமிழுக்கு மேலதிகமாக ஆங்கிலத்திலும் குறிப்பிடுதல் வேண்டும். விண்ணப்பம் தட்டச்சிடப்பட்டு தயாரிக்க இயலுமாயினும் அதனைச் சரியாகவும் தெளிவாகவும் விண்ணப்பதாரியின் கையெழுத்தால் பூரணப்படுத்துதல் வேண்டும். அதன் பிரகாரம் தயாரிக்கப்பட்ட விண்ணப்பப்படிவங்கள் பரீட்சார்த்திகளால் திணைக்களத் தலைவரின் ஊடாக, 2017, செத்தெம்பர் 11 ஆந் திகதிக்கு முன் கிடைக்குமாறு, “பரீட்சைகள் ஆணையாளர் நாயகம், அமைப்பு மற்றும் வெளிநாட்டுப் பரீட்சைகள் பிரிவு, இலங்கைப் பரீட்சைகள் திணைக்களம், த. பெ. இலக்கம் 1503, கொழும்பு” எனும் முகவரிக்கு பதிவுத்தபாலில் அனுப்பப்படுதல் வேண்டும். விண்ணப்பப்படிவம் வைத்தனுப்பும் கடிதம் உறையின் இடதுபக்க மேல் மூலையில் பரீட்சையின் பெயரைக்

குறிப்பிடுதல் வேண்டும். பூரணமற்ற தகவல்களைக் கொண்ட விண்ணப்பங்கள் மற்றும் கையேற்கும் இறுதித் தினத்திற்குப் பின்னர் கிடைக்கப்பெறும் விண்ணப்பங்கள் நிராகரிக்கப்படும். மேலும் பூர்த்திசெய்த விண்ணப்பம், பரீட்சை அறிவித்தலில் குறிப்பிட்ட மாதிரிப் படிவத்திற்கு அமைய தயாரிக்கப்பட்டதா என்பதையும் விண்ணப்பதாரிகள் சரிபார்த்தல் வேண்டும். அவ்வாறு இல்லாதவிடத்து விண்ணப்பம் நிராகரிக்கப்படும். (பூர்த்திசெய்த விண்ணப்பத்தின் பிரதியை வைத்திருத்தல் பயனுள்ளதாகும்.)

5. **பரீட்சார்த்திகளின் ஆளடையாளம்**.- பரீட்சார்த்திகள் பரீட்சை நிலையத்தில் தோற்றும் ஒவ்வொரு பாடத்தின்போதும் பரீட்சை நிலையப் பொறுப்பாளர் திருப்தியுறும் வகையில் தனது ஆளடையாளத்தை உறுதிப்படுத்துதல் வேண்டும். அதன் பொருட்டு பின்வரும் ஆவணங்களில் ஒன்று ஏற்றுக் கொள்ளப்படும் :-

(i) ஆட்பதிவுத் திணைக்களத்தின் ஆணையாளரால் வெளியிடப் பட்ட தேசிய அடையாள அட்டை ;
(ii) செல்லுபடியாகும் கடவுச்சீட்டு.

மேற்குறிப்பிட்ட ஆவணமொன்றைச் சமர்ப்பிக்கத் தவறும் பரீட்சார்த்தி சம்பந்தமாக பரீட்சை ஆணையாளர் நாயகத்தின் தீர்மானமே இறுதித் தீர்மானமாகும்.

6. பரீட்சார்த்திகளுக்கு பரீட்சைகள் ஆணையாளர் நாயகத்தினால் பரீட்சை நேர அட்டவணையுடன் அனுமதி அட்டையும் வழங்கப்படும். பரீட்சார்த்திகளுக்கு அனுமதி அட்டை வழங்கப்பட்டவுடன் அதுபற்றி இலங்கைப் பரீட்சைகள் திணைக்களத்தினூடாக பத்திரிகை அறிவித்தலின் மூலம் வெளியிடப்படும். அறிவித்தல் வெளியிட்டு 2 அல்லது 3 தினங்களின் பின்னரும் அனுமதி அட்டை கிடைக்காவிடின் அதுபற்றி அறிவித்தலில் குறிப்பிட்ட தொலைபேசி இலக்கங்கள் மூலம் இலங்கை பரீட்சைகள் திணைக்களத்திற்கு அறிவித்தல் வேண்டும். அதன்போது விண்ணப்பதாரரின் முழுப்பெயர், முகவரி, தேசிய அடையாள அட்டை இலக்கம் மற்றும் பரீட்சையின் பெயர் என்பவற்றைக் குறிப்பிடுதல் வேண்டும் என்பதுடன் அவ்வாறு விசாரிக்கும்போது விண்ணப்பதாரர் தம்வசம் வைத்திருந்த விண்ணப்பப்படிவத்தின் பிரதியையும், பரீட்சைக் கட்டணம் செலுத்திய பற்றுச்சீட்டின் பிரதியையும், தபால் அலுவலகத்தில் பதிவுசெய்த பற்றுச்சீட்டையும் கைவசம் வைத்திருத்தல் வேண்டும். கொழும்புக்கு வெளியேயுள்ள பிரதேசமாயின் அனுமதி அட்டையை அனுப்புவதற்கான தொலைநகல் இலக்கத்துடன் மேற்குறிப்பிட்ட தகவல்களையும் குறிப்பிட்டு உங்களின் விண்ணப்பக் கடிதத்தை தொலைநகல் மூலம்இலங்கை பரீட்சைகள் திணைக்களத்துக்கு அனுப்பி விசாரித்தலும் மிகப் பொருத்தமானதாகும்.

6.1 பரீட்சைக்கு விண்ணப்பத்திலிடப்படும் பரீட்சார்த்தியின் பதவி, சேவை நிலையம் என்பன பரீட்சை சம்பந்தமான சகல நடவடிக்கைகளுக்கும் ஏற்புடையன என்பதுடன் விண்ணப்பம் அனுப்பப்பட்டதன் பின்னர் அது தொடர்பில் இடம்பெறும் மாற்றங்கள் எதுவும் கவனத்திற் கொள்ளப்பட மாட்டாது.

6.2 விண்ணப்பப்படிவத்திலும் பரீட்சைக்கான அனுமதி அட்டையிலும் விண்ணப்பதாரரின் கையொப்பம் நிறுவனத் தலைவரினால் அல்லது அவரால் அதிகாரமளிக்கப்பட்ட அலுவலரொருவரினால் உறுதிப்படுத்தப்படல் வேண்டும். பரீட்சார்த்தி தனக்கு குறித்தொதுக்கப்பட்ட பரீட்சை மண்டபத்தில் உரிய சுட்டிலக்கத்தின்கீழ் பரீட்சைக்குத் தோற்றுதல் வேண்டும் என்பதுடன், பரீட்சை தினத்தன்று தனது கையொப்பத்தை உறுதிப்படுத்திக்கொண்ட அனுமதி அட்டையைப் பரீட்சை நிலையப் பொறுப்பாளரிடம் ஒப்படைத்தல் வேண்டும். அனுமதி அட்டையைச் சமர்ப்பிக்காத பரீட்சார்த்திகள் பரீட்சைக்குத் தோற்ற அனுமதிக்கப்பட மாட்டார்கள்.

7. இலங்கைப் பரீட்சைகள் திணைக்களத்தின் பரீட்சை ஆணையாளர் நாயகத்தால் வெளியிடப்பட்ட அனுமதி அட்டையுடனான உத்தியோகத்தர்களுக்கு பரீட்சைக்குத் தோற்றும் வகையில் திணைக்களத் தலைவரினால் கடமை விடுமுறை வழங்கப்படுதல் வேண்டும். பிரயாணக் கட்டணம் வழங்கப்பட மாட்டாது.

8. இப்பரீட்சை சிங்களம், தமிழ், ஆங்கில மொழி மூலங்களில் மாத்திரம் நடாத்தப்படும். விண்ணப்பதாரி பரீட்சைக்குத் தோற்றும் மொழி மூலமாக, போட்டிப் பரீட்சை ஒன்றின் ஊடாக சேவையில் இணைந்தவராயின் போட்டிப் பரீட்சைக்குத் தோற்றிய மொழிமூலத்தையும் போட்டிப் பரீட்சையின்றி அரச சேவையில் இணைந்தவராயின் அரச சேவையில் இணைவதற்கு ஏற்புடைய பரீட்சைக்குத் தோற்றிய மொழிமூலத்தையும் மொழி மூலமாகத் தெரிவுசெய்தல் வேண்டும். பரீட்சைக்குரிய சகல பாடங்களிற்கும் ஒரே மொழி மூலத்தைப் பயன்படுத்துதல் வேண்டும் என்பதுடன் விண்ணப்பித்த மொழிமூலத்தைப் பின்னர் மாற்றுவதற்கு இடமளிக்கப்பட மாட்டாது.

9. இப்பரீட்சை கொழும்பில் மாத்திரம் நடைபெறும்.

10. **பரீட்சைப் பாடத்திட்டம்**.- மேற்படி பதவிக்கு உரிய பரீட்சைகள் கீழ்க்குறிப்பிட்ட பாடங்களை உள்ளடக்கும் :

| பாடம் | காலம் | புள்ளிகள் | சித்திப் புள்ளிகள் |
|---|---|---|---|
| 1. அலுவலக நிர்வாகமும் தாபன விதிக் கோவையும் | 2 மணித்தியாலம் | 100 | 40% |
| 2. நிதி ஒழுங்கு விதிகள் | 2 மணித்தியாலம் | 100 | 40% |

| வினாப்பத்திரம் | பாடத்திட்டம் |
|---|---|
| 1. அலுவலக நிர்வாகமும் தாபனவிதிக் கோவையும் | இதன் பொருட்டு தாபன விதிக் கோவையின் XV, XVI, XXIII, XXIV, XXV, XXVII, XXVIII, XXX, XXXIII, XLVII, XLVIII ஆகிய அதிகாரங்களையும் அவ்வதிகாரங்களின் திருத்தம் செய்யப்பட்ட சுற்றறிக்கைகளிலும் கவனம் செலுத்தவும். |
| 2. நிதி ஒழுங்கு விதிகள் | இது நிதி ஒழுங்கு விதிகளின்கீழ் குறிப்பிடப்பட்ட அதிகாரங்களை உள்ளடக்கும் :-<br>* VI ஆம் அதிகாரம்.- அரசாங்க நிதிப் பொறுப்பு, கட்டு நிதி, வங்கிக் கணக்கு, அரச நிதிப் பாதுகாப்பு, சுற்றாய்வுச் சபை, மேலதிகப் பற்று வங்கிக் கணக்குகள் (நி. ஒ. 315-396 வரை)<br>* பெறுகை வழிகாட்டல்கள் 2006 - பொருட்கள், வேலைகளின்கீழ் பெறுகைச் செயன் முறை. |

**குறிப்பு** :

*மேற்படி பாடங்களுக்கு தனித்தனியாகவும் தோற்ற முடியும்.

*குறித்த காலத்தில் பரீட்சையில் சித்தியடையாமை அதன் பின்னரான வேதன ஆண்டேற்றத்தை பிற்போடுவதற்கு ஏதுவாகலாம்.

11. பரீட்சார்த்திக்கு பரீட்சை அனுமதி அட்டை வழங்குதல், அவர் பரீட்சைக்குத் தோற்ற தகைமையுள்ளவர் எனக் கருதப்பட முடியாது.

12. இவ்வர்த்தமானி அறிவித்தலில் கூறப்பட்ட ஏற்பாடுகள் இன்றி வேறு ஏதேனும் விடயங்கள் தொடர்பில் தொகைமதிப்பு புள்ளிவிபரப் பணிப்பாளர் நாயகத்தின் தீர்மானமே இறுதித் தீர்மானமாகும்.

13. இவ்வறிவித்தலின் சிங்கள, தமிழ், ஆங்கிலப் பதிப்புகளில் ஏதேனும் குறைபாடுகள் இருப்பின் சிங்களப் பதிப்பில் குறிப்பிட்ட விடயங்களே உத்தியோகபூர்வமானது.

கலாநிதி ஏ. ஜே. சத்தரசிங்ஹ,
பணிப்பாளர் நாயகம்,
தொகைமதிப்பு, புள்ளிவிபரத் திணைக்களம்.

தொகைமதிப்பு, புள்ளிவிபரத் திணைக்களம்,
"சங்கியான மந்திரய",
இல. 306/71, பொல்துாவ வீதி,
பத்தரமுல்லை.

மாதிரி விண்ணப்பப்படிவம்

**தொகைமதிப்பு மற்றும் புள்ளிவிபரத் திணைக்களத்தின் புள்ளிவிபர உத்தியோகத்தர் தரம் I இற்கான இரண்டாவது வினைத்திறன்காண் தடைதாண்டல் பரீட்சை - 2013(2017)**

Second Efficiency Bar Examination for Grade I Statistical Officers in the Department of Census and Statistics - 2013(2017)

(அலுவலக உபயோகத்திற்கு)

பரீட்சைக்குத் தோற்றும் மொழி மூலம் :
சிங்களம் - 2
தமிழ் - 3
ஆங்கிலம் - 4
(உரிய இலக்கத்தை பெட்டியில் எழுதவும்)

1. 1.1 முழுப்பெயர் (ஆங்கில பெரிய எழுத்துக்களில்) :----.
(உ-ம் : HERATH MUDIYANSELAGE SAMAN KUMARA GUNAWARDHANA)

1.2 இறுதிப் பெயரை முதலிலும் ஏனைய பெயர்களின் முதலெழுத்துக்களை இறுதியிலும் இட்டு பெயர் (ஆங்கில பெரிய எழுத்துக்களில்) :----.
(உ-ம் : GUNAWARDHANA, H. M. S. K.)

1.3 முழுப்பெயர் (சிங்களத்தில்/ தமிழில்) :----.

2. 2.1 அலுவலகத்தின்/ திணைக்களத்தின்/ நிறுவனத்தின் பெயரும் முகவரியும் (ஆங்கில பெரிய எழுத்துக் களில்) :----.
(அனுமதி அட்டை இந்த முகவரிக்கு தபாலில் அனுப்பப்படும்).

2.2 அலுவலகத்தின் /திணைக்களத்தின்/ நிறுவனத்தின் பெயரும் முகவரியும் (சிங்களத்தில்/ தமிழில்) :----.

2.3 தனிப்பட்ட முகவரி (ஆங்கில பெரிய எழுத்துக் களில்) :----.

2.4 தொலைபேசி இலக்கம் :----.

3. தேசிய அடையாள அட்டை இல. :

4. பால் (ஆண்/ பெண்) :
ஆண் - 0
பெண் - 1
(உரிய இலக்கத்தைக் கூட்டினுள் எழுதவும்)

5. நீங்கள் இம்முறை தோற்றவுள்ள பாடம்/ பாடங்கள் :

| தொடர் இலக்கம் | பாடம் | பாட இலக்கம் |
|---|---|---|
| 1. | | |
| 2. | | |
| 3. | | |

6. பிறந்த திகதி :

ஆண்டு | | | | | மாதம் | | | திகதி | | |

7. தற்போது வகிக்கும் பதவி :

7.1 பதவி :----.

7.2 நியமனக் கடித இலக்கம் :----.

8. 8.1 நீங்கள் பரீட்சைக்கு முதற்தடவையாகவா தோற்று கிறீர்கள் ? :----.

8.2 முதற் தடவையல்லாவிடின் செலுத்தப்பட்ட பரீட்சைக் கட்டணம் :----.

8.3 பற்றுச்சீட்டு இல. :----.

8.4 திகதி :----.

பற்றுச்சீட்டை இங்கு ஒட்டவும். (ஏற்புடையதாயின் மட்டும்)
(பற்றுச்சீட்டின் பிரதியை வைத்திருத்தல் பயனுள்ளதாகும்.)

9. விண்ணப்பதாரியின் உறுதியுரை :

மேற்குறிப்பிட்ட விபரங்கள் சரியானதென்றும் மேற்குறிப் பிட்ட மொழி மூலத்தில் பரீட்சைக்குத் தோற்றுவதற்குத் தகுதியுடையவனென்றும் பரீட்சைக் கட்டணம் ரூபா ............................. செலுத்திப்பெற்ற பற்றுச்சீட்டு ஒட்டப்பட்டுள்ளதென்றும் தெரிவித்துக்கொள்வதுடன் இப்பரீட் சையை நடத்துதல் மற்றும் பெறுபேறுகளை வெளியிடுதல் சம்பந்தமாக பரீட்சைகள் ஆணையாளர் நாயகத்தினால் விதிக்கப்படும் ஒழுங்குவிதிகளுக்கு அமைந்தொழுக உடன்படு கின்றேன் என்றும் உறுதிமொழிகிறேன்.

----,
விண்ணப்பதாரியின் கையொப்பம்.

திகதி :----.

**குறிப்பு**.- தமது திணைக்களத் தலைவர் அல்லது திணைக்களத் தலைவர் சார்பாக கையொப்பமிடுவதற்கு அதிகாரமளிக்கப்பட்ட அலுவலர் ஒருவர் முன்னிலையில் விண்ணப்பதாரி கையொப்பமிடுதல் வேண்டும்.

**10. விண்ணப்பதாரியின் கையொப்பத்தை உறுதிப் படுத்தல் :**

திரு./திருமதி/செல்வி ................................................ எனது திணைக்களத்தில் சேவையாற்றுகிறார் என்றும் எனக்குத் தனிப்பட்ட முறையில் தெரிந்தவர் என்றும் .................................. .................. ஆந் திகதி என் முன்னிலையில் கையொப்பமிட்டார் என்றும் குறிப்பிட்ட பரீட்சைக் கட்டணத்தைச் செலுத்திப் பெற்றுக்கொண்ட பற்றுச்சீட்டை இங்கு ஒட்டியுள்ளார் என்றும் உறுதிப்படுத்துகிறேன்.

----,
கையொப்பத்தை உறுதிப்படுத்தும் அலுவலரின் கையொப்பம்.

பெயர் :----.
பதவி :----.
முகவரி :----.
திகதி :----.
(பதவி முத்திரை மூலம் உறுதிப்படுத்தவும்.)

**11. திணைக்களத் தலைவரின் சான்றுரை :**

(1) மேலே வழங்கப்பட்ட விபரங்கள் சரிபார்க்கப்பட்ட தென்றும்,
(2) உத்தியோகத்தர் இப்பரீட்சைக்குத் தோற்றுவதற்குத் தகுதியுடையவர் என்றும் சான்றுப்படுத்துகிறேன்.

----,
திணைக்களத் தலைவரின் கையொப்பமும் பதவி முத்திரையும்.

பெயர் :----.
பதவி :----.
முகவரி :----.
திகதி :----.

8-360/ 1

---

## தொகைமதிப்பு மற்றும் புள்ளிவிபரத் திணைக்களத்தின் புள்ளிவிபர உத்தியோகத்தர் தரம் II இற்கான முதலாவது வினைத்திறன்காண் தடைதாண்டல் பரீட்சை - 2013(2017)

## First Efficiency Bar Examination for Grade II Statistical Officers in the Department of Census and Statistics - 2013(2017)

தொகைமதிப்பு மற்றும் புள்ளிவிபரத் திணைக்களத்தின் புள்ளிவிபர உத்தியோகத்தர் தரம் II பதவிக்கான அங்கீகரிக்கப்பட்ட ஆட்சேர்ப்பு முறை ஏற்பாடுகளின் பிரகாரம் முதலாவது வினைத்திறன்காண் தடைதாண்டல் பரீட்சை இலங்கைப் பரீட்சைகள் திணைக்களத்தால் 2017, நவெம்பர் மாதத்தில் நடத்தப்படுமென இத்தால் அறிவிக்கப்படுகிறது.

2. (i) இப்பரீட்சை, இலங்கைப் பரீட்சைகள் திணைக்களத்தின் பரீட்சைகள் ஆணையாளர் நாயகத்தினால் நடத்தப்படுவதுடன் பரீட்சையை நடாத்துதல், பெறுபேறுகளை வெளியிடுதல் சம்பந்தமாக அவரால் விதிக்கப்பட்ட ஒழுங்குவிதிகளுக்குப் பரீட்சார்த்திகள் கீழ்ப்படிதல் வேண்டும். பரீட்சை நடாத்துதல் மற்றும் பெறுபேறு வெளியிடல் சம்பந்தமாக பரீட்சை ஆணையாளர் நாயகத்தின் தீர்மானமே இறுதித் தீர்மானமாகும்.

(ii) பரீட்சார்த்திகளுக்கான விதிமுறைகள், வர்த்தமானியில் பிரத்தியேகமாக அச்சிடப்பட்டுள்ளது. இவ்விதிமுறைகளை மீறுமிடத்து, இலங்கைப் பரீட்சைகள் திணைக்களத்தின் பரீட்சைகள் ஆணையாளர் நாயகத்தினால் விதிக்கப்படும் தண்டனைக்கு ஆளாக நேரிடும்.

3. **பரீட்சைக் கட்டணம்**.- பரீட்சைக்குரிய பாடங்கள் பொருட்டு ஒரே தடவையில் அல்லது வெவ்வேறான இரு தடவைகளில் தோற்ற முடியும். முழுமையாக அல்லது ஒரு பாடத்திற்கு முதல் தடவையாக தோற்றும் பரீட்சார்த்திகளிடமிருந்து பரீட்சைக் கட்டணம் அறவிடப்பட மாட்டாது. அதன் பின்னர் தோற்றும் ஒவ்வொரு தடவையும் ஒரு பாடத்துக்கு 250 ரூபாவும், மொத்தப் பாடங்கள் பொருட்டு 500 ரூபாவும் பரீட்சைக் கட்டணமாக அறவிடப்படும். இப்பரீட்சைக் கட்டணம் பரீட்சைகள் ஆணையாளர் நாயகத்தின் வருமானத் தலைப்பு 2003-02-13 இற்கு வரவு வைக்கும் வகையில் நாட்டின் எந்த ஒரு தபால்/ உப தபால் அலுவலகத்தில் பணத்தைச் செலுத்திப் பற்றுச்சீட்டை விண்ணப்பப்படிவத்தின் குறித்தொதுக்கப்பட்ட பகுதியில் கழராதவாறு ஒட்டுதல் வேண்டும். (பற்றுச்சீட்டின் பிரதியை வைத்திருத்தல் பயனுள்ளதாகும்.) பரீட்சைக் கட்டணத்தின் பொருட்டு காசுக் கட்டளை அல்லது முத்திரை ஏற்றுக்கொள்ளப்பட மாட்டாது என்பதுடன், செலுத்தப்பட்ட பணம் எந்தவொரு காரணத்திற்காகவும் மீளச் செலுத்தப்படவோ அல்லது வேறு பரீட்சையின் பொருட்டு மாற்றப்படவோ முடியாது.

4. **விண்ணப்பப்படிவம்**.- விண்ணப்பப்படிவம் இங்கு இணைக்கப்பட்டுள்ள மாதிரிக்கு அமைய இருத்தல் வேண்டும். இவ்விண்ணப்பப்படிவம் ஏ4 தாளின் இரு பக்கத்தையும் பயன்படுத்தித் தயாரிக்கப்படுவதுடன் தலைப்பு இல. 1 இலிருந்து 5 வரை முதலாம் பக்கத்திலும் ஏனையவை இரண்டாம் பக்கத்திலும் தயாரிக்கப்படுதலும் வேண்டும். விண்ணப்பம் தயாரிக்கும்போது தலைப்பில் குறிப்பிட்ட பரீட்சையின் பெயரை சிங்கள பரீட்சார்த்திகள் சிங்களத்திற்கு மேலதிகமாக ஆங்கிலத்திலும், தமிழ் பரீட்சார்த்திகள் தமிழுக்கு மேலதிகமாக ஆங்கிலத்திலும் குறிப்பிடுதல் வேண்டும். விண்ணப்பம் தட்டச்சிடப்பட்டு தயாரிக்க இயலுமாயினும் அதனைச் சரியாகவும் தெளிவாகவும் விண்ணப்பதாரியின் கையெழுத்தால் பூரணப்படுத்துதல் வேண்டும். அதன் பிரகாரம் தயாரிக்கப்பட்ட விண்ணப்பப்படிவங்கள் பரீட்சார்த்திகளால் திணைக்கள தலைவரின் ஊடாக, 2017 ஆம் ஆண்டு செத்தெம்பர் மாதம் 11 ஆந் திகதிக்கு முன் கிடைக்குமாறு, ''பரீட்சைகள் ஆணையாளர் நாயகம், அமைப்பு மற்றும் வெளிநாட்டுப் பரீட்சைகள் பிரிவு, இலங்கைப் பரீட்சைகள் திணைக்களம், த. பெ. இலக்கம் 1503, கொழும்பு'' எனும் முகவரிக்கு பதிவுத்தபாலில் அனுப்பப்படுதல் வேண்டும். விண்ணப்பப்படிவம் வைத்தனுப்பும் கடிதம் உறையின் இடதுபக்க மேல் மூலையில் பரீட்சையின் பெயரைக் குறிப்பிடுதல் வேண்டும். பூரணமற்ற தகவல்களைக் கொண்ட விண்ணப்பங்கள் மற்றும் கையேற்கும் இறுதித் தினத்திற்குப் பின்னர் கிடைக்கப்பெறும் விண்ணப்பங்களும் நிராகரிக்கப்படும். மேலும் பூர்த்திசெய்த விண்ணப்பம், பரீட்சை அறிவித்தலில் குறிப்பிட்ட மாதிரிப் படிவத்திற்கு அமைய தயாரிக்கப்பட்டதா என்பதையும் விண்ணப்பதாரிகள் சரிபார்த்தல் வேண்டும். அவ்வாறு இல்லாதவிடத்து விண்ணப்பம் நிராகரிக்கப்படும். (பூர்த்திசெய்த விண்ணப்பத்தின் பிரதியை வைத்திருத்தல் பயனுள்ளதாகும்.)

5. **பரீட்சார்த்திகளின் ஆளடையாளம்**.- பரீட்சார்த்திகள் பரீட்சை நிலையத்தில் தோற்றும் ஒவ்வொரு பாடத்தின்போதும் பரீட்சை நிலையப் பொறுப்பாளர் திருப்தியுறும் வகையில் தனது ஆளடையாளத்தை உறுதிப்படுத்துதல் வேண்டும். அதன் பொருட்டு பின்வரும் ஆவணங்களில் ஒன்று ஏற்றுக்கொள்ளப்படும் :-

(i) ஆட்பதிவுத் திணைக்களத்தின் ஆணையாளரால் வழங்கப்பட்ட தேசிய ஆள் அடையாள அட்டை ;
(ii) செல்லுபடியாகும் கடவுச்சீட்டு.

மேற்குறிப்பிட்ட ஆவணமொன்றைச் சமர்ப்பிக்கத் தவறும் பரீட்சார்த்தி சம்பந்தமாக பரீட்சை ஆணையாளர் நாயகத்தின் தீர்மானமே இறுதித் தீர்மானமாகும்.

6. பரீட்சார்த்திகளுக்கு பரீட்சைகள் ஆணையாளர் நாயகத்தினால் பரீட்சை நேர அட்டவணையுடன் அனுமதி அட்டையும் வழங்கப்படும். பரீட்சைக்குத் தோற்றும் விண்ணப்பதாரர்கள், தமது கையொப்பத்தைச் சான்றுப்படுத்திக்கொண்ட அனுமதி அட்டையை பரீட்சை நிலைய பொறுப்பாளரிடம் சமர்ப்பித்தல் வேண்டும். அத்தகைய அனுமதி அட்டை இன்றி பரீட்சைக்குத் தோற்ற அனுமதிக்கப்பட மாட்டாது. பரீட்சார்த்திகளுக்கு அனுமதி அட்டை வழங்கப்பட்டவுடன் அதுபற்றி இலங்கைப் பரீட்சைகள் திணைக்களத்தினூடாக பத்திரிகை அறிவித்தலின் மூலம் வெளியிடப்படும். அறிவித்தல் வெளியிட்டு 2 அல்லது 3 தினங்களின் பின்னரும் அனுமதி அட்டை கிடைக்காவிடின் அதுபற்றி அறிவித்தலில் குறிப்பிட்ட தொலைபேசி இலக்கங்கள் மூலம் இலங்கைப் பரீட்சைகள் திணைக்களத்திற்கு அறிவித்தல் வேண்டும். அதன்போது விண்ணப்பதாரரின் முழுப்பெயர், முகவரி, தேசிய அடையாள அட்டை இலக்கம் மற்றும் பரீட்சையின் பெயர் என்பவற்றைக் குறிப்பிடுதல் வேண்டும் என்பதுடன் அவ்வாறு விசாரிக்கும்போது விண்ணப்பதாரர் தம்வசம் வைத்திருந்த விண்ணப்பப்படிவத்தின் பிரதியையும், பரீட்சைக் கட்டணம் செலுத்திய பற்றுச்சீட்டின் பிரதியையும், தபால் அலுவலகத்தில் பதிவுசெய்த பற்றுச்சீட்டையும் கைவசம் வைத்திருத்தல் வேண்டும். கொழும்புக்கு வெளியேயுள்ள பிரதேசமாயின் அனுமதி அட்டையை அனுப்புவதற்கான தொலைநகல் இலக்கத்துடன் மேற்குறிப்பிட்ட தகவல்களையும் குறிப்பிட்டு உங்களின் விண்ணப்பக் கடிதத்தை தொலைநகல் மூலம் பரீட்சைகள் திணைக்களத்துக்கு அனுப்பி விசாரித்தலும் மிகப் பொருத்தமானதாகும்.

6.1 பரீட்சைக்கு, விண்ணப்பத்திலிடப்படும் பரீட்சார்த்தியின் பதவி, சேவை நிலையம் என்பன பரீட்சை சம்பந்தமான சகல நடவடிக்கைகளுக்கும் ஏற்புடையன என்பதுடன் விண்ணப்பம் அனுப்பப்பட்டதன் பின்னர் அது தொடர்பில் இடம்பெறும் மாற்றங்கள் எதுவும் கவனத்திற் கொள்ளப்பட மாட்டாது.

6.2 பரீட்சைக்கான அனுமதி அட்டையில் விண்ணப்பதாரரின் கையொப்பம் சான்றுப்படுத்தப்பட்டிருத்தல் வேண்டும். விண்ணப்பதாரர் அனுமதி அட்டையில் தனது கையொப்பத்தை நிறுவனத் தலைவர் அல்லது அவரால் அதிகாரமளிக்கப்பட்ட அலுவலர் ஒருவரைக் கொண்டு சான்றுப்படுத்திக்கொள்ளுதல் வேண்டும்.

7. இலங்கைப் பரீட்சைகள் திணைக்களத்தின் பரீட்சை ஆணையாளர் நாயகத்தால் வெளியிடப்பட்ட அனுமதி

அட்டையுடனான உத்தியோகத்தர்களுக்கு பரீட்சைக்குத் தோற்றும் வகையில் திணைக்களத் தலைவரினால் கடமை விடுமுறை வழங்கப்படுதல் வேண்டும். பிரயாணக் கட்டணம் வழங்கப்பட மாட்டாது.

8. இப்பரீட்சை சிங்களம், தமிழ், ஆங்கில மொழி மூலங்களில் மாத்திரம் நடத்தப்படும். விண்ணப்பதாரி பரீட்சைக்குத் தோற்றும் மொழி மூலமாக, போட்டிப் பரீட்சை ஒன்றின் ஊடாக சேவையில் இணைந்தவராயின் போட்டிப் பரீட்சைக்குத் தோற்றிய மொழிமூலத்தையும் போட்டிப் பரீட்சையின்றி அரச சேவையில் இணைந்தவராயின் அரச சேவையில் இணைவதற்கு ஏற்புடைய பரீட்சைக்குத் தோற்றிய மொழிமூலத்தையும் மொழி மூலமாகத் தெரிவுசெய்தல் வேண்டும். பரீட்சைக்குரிய சகல பாடங்களிற்கும் ஒரே மொழி மூலத்தைப் பயன்படுத்துதல் வேண்டும் என்பதுடன் விண்ணப்பித்த மொழிமூலத்தைப் பின்னர் மாற்றுவதற்கு இடமளிக்கப்பட மாட்டாது.

9. இப்பரீட்சை கொழும்பில் மாத்திரம் நடைபெறும்.

10. **பரீட்சைப் பாடத்திட்டம்**.- மேற்படி பதவிக்கு உரிய பரீட்சைகள் கீழ்க்குறிப்பிட்ட பாடங்களை உள்ளடக்கும் :

| *பாடம்* | *காலம்* | *புள்ளிகள்* | *சித்திப் புள்ளிகள்* |
|---|---|---|---|
| 1. அடிப்படைப் புள்ளிவிபர முறைகள் | 2 மணித்தியாலம் | 100 | 40% |
| 2. அலுவலக நிர்வாகமும் தாபன விதிக் கோவையும் | 2 மணித்தியாலம் | 100 | 40% |
| 3. நிதி ஒழுங்கு விதிகள் | 2 மணித்தியாலம் | 100 | 40% |

| | *வினாப் பத்திரம்* | *பாடத்திட்டம்* |
|---|---|---|
| I | அடிப்படைப் புள்ளிவிபர முறைகள் | தரவு சேகரித்தல், சமர்ப்பித்தல், t பரம்பல், சாதாரண பரம்பல், t கருதுகோட் சோதனைக் கோட்பாடுகளும் $X^2$ சோதனையும், இழைவரையம் மற்றும் மீடிறன் வளையி, மத்திய சார்பும், பிரிகை அளவுகளும் (ஆகாரம், இடையம், இடை), மாறற்றிறன், காலணை, நியம விலகல், மாதிரியெடுநுட்பத் தத்துவங்கள், மாதிரியெடு அளவீடு, மாதிரியெடுப்பு வலு, மாதிரியெடுப்பல்லா வலு, சுட்டெண்கள், எளிய இணைபு, ஏகபரிமாணப் பிற்செலவு, அடிப்படைப் புள்ளிவிபர அறிவு |
| II | அலுவலக நிர்வாகமும் தாபன விதிக் கோவையும் | இதன் பொருட்டு தாபன விதிக் கோவையின் II, III, IV, V, VIII, XII, XIII, XIV, XIX ஆகிய அதிகாரங்களையும் அவ்வதிகாரங்கள் மீதும் திருத்தஞ் செய்யப்பட்ட சுற்றறிக்கைகள் மீதும் கவனம் செலுத்தவும். |
| III | நிதி ஒழுங்கு விதிகள் | இது நிதி ஒழுங்கு விதிகளின்கீழ் குறிப்பிடப்பட்ட அதிகாரங்களை உள்ளடக்கும் :- <br>* *I ஆம் அத்தியாயம்*.- வருமான செலவின மதிப்பீடு, திரட்டிய நிதியம், வருடாந்த மதிப்பீடு, வருடாந்த மதிப்பீட்டை மாற்றுதல் (நி. ஒ. 1-68 வரை) <br>* *III ஆம் அத்தியாயம்*.- நிதி முகாமையும் பொறுப்புடைமையும், பிரதம கணக்கீட்டு உத்தியோகத்தர்கள், கணக்கீட்டு உத்தியோகத்தர்கள், வருமானக் கணக்கு உத்தியோகத்தர்களின் கொடுப்பனவுகளுக்கு அதிகாரம் வழங்குதல், அங்கீகாரமளித்தல், சான்றுபடுத்தல், வேலைகளைக் குறித் தொதுக்குதல் (நி. ஒ. 124-147 வரை) |

**குறிப்பு**.- *மேற்படி பாடங்களுக்கு தனித்தனியாகவும் தோற்ற முடியும்.

*குறித்த காலத்தில் பரீட்சையில் சித்தியடையாமை அதன் பின்னரான வேதன ஆண்டேற்றத்தை பிற்போடுவதற்கு ஏதுவாகலாம்.

11. பரீட்சார்த்திக்கு பரீட்சை அனுமதி அட்டை வழங்கப்படுதலானது, அவர் பரீட்சைக்குத் தோற்ற தகைமையுள்ளவர் எனக் கருதுதலாகாது.

12. இவ்வர்த்தமானி அறிவித்தலில் கூறப்பட்ட ஏற்பாடுகள் தவிர்ந்த வேறு ஏதேனும் விடயம் தொடர்பில் தொகைமதிப்பு புள்ளிவிபரப் பணிப்பாளர் நாயகத்தின் தீர்மானமே இறுதித் தீர்மானமாகும்.

13. இவ்வறிவித்தலின் சிங்கள, தமிழ், ஆங்கிலப் பதிப்புகளில் ஏதேனும் குறைபாடுகள் இருப்பின் சிங்களப் பதிப்பில் குறிப்பிட்ட விடயங்களே உத்தியோகபூர்வமானவையாகும்.

கலாநிதி ஏ. ஜே. சதரசிங்ஹ,
பணிப்பாளர் நாயகம்,
தொகைமதிப்பு மற்றும் புள்ளிவிபரத் திணைக்களம்.

தொகைமதிப்பு மற்றும் புள்ளிவிபரத் திணைக்களம்,
"சங்கியான மந்திரய",
இல. 306/71, பொல்துூவ வீதி,
பத்தரமுல்லை.

மாதிரி விண்ணப்பப்படிவம்

**தொகைமதிப்பு மற்றும் புள்ளிவிபரத் திணைக்களத்தின் புள்ளிவிபர உத்தியோகத்தர் தரம் II இற்கான முதலாவது வினைத்திறன்காண் தடைதாண்டல் பரீட்சை - 2013(2017)**

First Efficiency Bar Examination for Grade II Statistical Officers in the Department of Census and Statistics - 2013 (2017)

(அலுவலக உபயோகத்திற்கு)

பரீட்சைக்குத் தோற்றும் மொழி மூலம் :
சிங்களம் - 2
தமிழ் - 3
ஆங்கிலம் - 4
(உரிய இலக்கத்தைக் கூட்டினுள் எழுதவும்)

1. 1.1 முழுப்பெயர் (ஆங்கில பெரிய எழுத்துக்களில்) :----.
(உ-ம் : HERATH MUDIYANSELAGE SAMAN KUMARA GUNAWARDHANA)

1.2 இறுதிப் பெயரை முதலிலும் ஏனைய பெயர்களின் முதலெழுத்துக்களை இறுதியிலும் இட்டு பெயர் (ஆங்கில பெரிய எழுத்துக்களில்) :----.
(உ-ம் : GUNAWARDHANA, H. M. S. K.)

1.3 முழுப்பெயர் (சிங்களத்தில்/ தமிழில்) :----.

2. 2.1 அலுவலகத்தின்/ திணைக்களத்தின்/ நிறுவனத்தின் பெயரும் முகவரியும் (ஆங்கில பெரிய எழுத்துக் களில்) :----.
(அனுமதி அட்டை இந்த முகவரிக்கு தபாலில் அனுப்பப்படும்.)

2.2 அலுவலகத்தின் /திணைக்களத்தின்/ நிறுவனத்தின் பெயரும் முகவரியும் (சிங்களத்தில்/ தமிழில்) : ----.

2.3 தனிப்பட்ட முகவரி (ஆங்கில பெரிய எழுத்துக் களில்) :----.

2.4 தொலைபேசி இலக்கம் :

3. தேசிய ஆள் அடையாள அட்டை இல. :

4. பால் (ஆண்/ பெண்) :
ஆண் - 0
பெண் - 1
(உரிய இலக்கத்தைக் கூட்டினுள் எழுதவும்)

5. நீங்கள் இம்முறை தோற்றவுள்ள பாடம்/ பாடங்கள் :

| தொடர் இலக்கம் | பாடம் | பாட இலக்கம் |
|---|---|---|
| 1. | | |
| 2. | | |
| 3. | | |

6. பிறந்த திகதி :

ஆண்டு மாதம் திகதி

7. தற்போது வகிக்கும் பதவி :

7.1 பதவி :----.

7.2 நியமனக் கடித இலக்கம் :----.

8. 8.1 நீங்கள் பரீட்சைக்கு முதற்தடவையாகவா தோற்று கிறீர்கள் ? :----.

8.2 முதற் தடவையல்லாவிடின் செலுத்தப்பட்ட பரீட்சைக் கட்டணம் :----.

8.3 பற்றுச்சீட்டு இல. :----.

8.4 திகதி :----.

பற்றுச்சீட்டை இங்கு கழராதவாறு ஒட்டவும்.
(ஏற்புடையதாயின் மட்டும்)
(பற்றுச்சீட்டின் பிரதியை வைத்திருத்தல் பயனுள்ளதாகும்.)

9. விண்ணப்பதாரியின் உறுதியுரை :

மேற்குறிப்பிட்ட விபரங்கள் சரியானதென்றும் மேற்குறிப்பிட்ட மொழி மூலத்தில் பரீட்சைக்குத் தோற்றுவதற்குத் தகுதியுடைய வனென்றும் பரீட்சைக் கட்டணம் ரூபா ............................ செலுத்திப்பெற்ற பற்றுச்சீட்டு ஒட்டப்பட்டுள்ளதென்றும் தெரிவித்துக்கொள்வதுடன் இப்பரீட்சையை நடத்துதல் மற்றும் பெறுபேறுகளை வெளியிடுதல் சம்பந்தமாக பரீட் சைகள் ஆணையாளர் நாயகத்தினால் விதிக்கப்படும் ஒழுங்கு விதிகளுக்கு அமைந்தொழுக உடன்படுகின்றேன் என்றும் உறுதிமொழிகிறேன்.

----,
பரீட்சார்த்தியின் கையொப்பம்.

திகதி :----.

**குறிப்பு**.- தமது திணைக்களத் தலைவர் அல்லது திணைக்களத் தலைவருக்குப் பதிலாக கையொப்பமிடுவதற்கு அதிகாரமளிக்கப்பட்ட அலுவலர் ஒருவர் முன்னிலையில் பரீட்சார்த்தி கையொப்பமிடுதல் வேண்டும்.

**10. கையொப்பத்தை உறுதிப்படுத்தல் :**

திரு./திருமதி/செல்வி ................................................ எனது திணைக்களத்தில் சேவையாற்றுகிறார் என்றும் எனக்குத் தனிப்பட்ட முறையில் தெரிந்தவர் என்றும் ................................ .................. ஆந் திகதி என் முன்னிலையில் கையொப்பமிட்டார் என்றும் பரீட்சைக் கட்டணத்தைச் செலுத்திப் பெற்றுக்கொண்ட பற்றுச்சீட்டை ஒட்டியுள்ளார் என்றும் உறுதிப்படுத்துகிறேன்.

----,
கையொப்பத்தை உறுதிப்படுத்தும்
அலுவலரின் கையொப்பமும்.

பெயர் :----.
பதவி :----.
முகவரி :----.
திகதி :----.
(பதவி முத்திரை மூலம் உறுதிப்படுத்தவும்.)

**11. திணைக்களத் தலைவரின் சான்றுரை :**

(1) மேலே வழங்கப்பட்ட விபரங்கள் சரி பார்க்கப்பட்ட தென்றும்,
(2) உத்தியோகத்தர் இப்பரீட்சைக்குத் தோற்றுவதற்குத் தகுதியுடையவர் என்றும் சான்றுபடுத்துகிறேன்.

----,
திணைக்களத் தலைவரின் கையொப்பமும்
பதவி முத்திரையும்.

பெயர் :----.
பதவி :----.
முகவரி :----.
திகதி :----.

8-360/ 2

---

## சுகாதார, போசணை மற்றும் சுதேச வைத்திய அமைச்சு

மாணவ தாதியர் பயிற்சிக்கான ஆட்சேர்ப்பு - 2017

சுகாதார, போசணை மற்றும் சுதேச வைத்திய அமைச்சின் கீழ் மாணவ தாதியர் பயிற்சியின் பொருட்டு ஆட்சேர்த்துக் கொள்வதற்கு, 1837/8 ஆம் இலக்க 2013.11.19 ஆந் திகதிய இலங்கைச் சனநாயக சோசலிசக் குடியரசின் அதிவிசேட வர்த்தமானி அறிவித்தலில் பிரசுரிக்கப்பட்ட இலங்கை தாதியர் சேவை பிரமாணக் குறிப்பில் மற்றும் அதன் காலத்திற்குக்காலம் மேற்கொள்ளப்பட்ட திருத்தங்களில் குறிப்பிடப்பட்டுள்ள தகைமைகளைக் கொண்டுள்ள விண்ணப்பதாரிகளிடம் இருந்து விண்ணப்பங்கள் கோரப்படுகின்றன. (தாதியர் சேவை பிரமாணக் குறிப்பின் விதிமுறைகளுக்கு அமைய இந்த அமைச்சின்கீழ் நிருவகிக்கப்படும் வைத்தியசாலைகளின் அவசியத்திற்கேற்ப ஆண் விண்ணப்பதாரிகள் இணைத்துக் கொள்ளப்படுவர்).

**குறிப்பு**.- 2016 ஆம் ஆண்டிற்கு தாதியர் பயிற்சிக்காக விண்ணப்பித்து தற்சமயம் www.health.gov.lk இணையத் தளத்தில் தெரிவுசெய்யப்பட்டுள்ளதாக பெயர் குறிப்பிடப் பட்டுள்ள மாணவர்கள் இச்சுற்றுநிருபத்தின் பிரகாரம் மீண்டும் விண்ணப்பிக்கத் தேவையில்லை என்பதைக் கவனத்திற்கொள்ள வேண்டும்.

1. இதன்போது நாடளாவிய ரீதியில் இணைத்துக்கொள்ளும் மொத்த எண்ணிக்கை ஒவ்வொரு மாவட்டத்தினதும் சனத்தொகையை அடிப்படையாகக் கொண்டு மக்களின் விகிதாசாரத்திற்கு பிரித்து ஒவ்வொரு மாவட்டத்திற்கும் பகிர்ந்தளிக்க வேண்டிய எண்ணிக்கை தீர்மானிக்கப்படும்.

அதன் பின் ஒவ்வொரு மாவட்டத்திற்கு இணைத்துக்கொள்ள வேண்டிய எண்ணிக்கைக்கு உரிய மாவட்டத்தில் ஒவ்வொரு வருடமும் விண்ணப்பங்கள் கோரி, நேர்முகப் பரீட்சையின் பின்னர் தகுதியானவர்களை விகிதாசார அடிப்படையில் பிரித்து உரிய மாவட்டத்தில் ஒவ்வொரு வருடத்திற்கும் இணைத்துக்கொள்ளும் தொகை தீர்மானிக்கப்படும்.

அதன் பின்னர் ஒவ்வொரு வருடத்திலும் இணைத்துக் கொள்ள வேண்டிய தொகை அந்த வருடத்தின் உயிரியல் விஞ்ஞானத்துறை மற்றும் பௌதீக விஞ்ஞானத் துறையின்கீழ் விண்ணப்பித்து நேர்முகப் பரீட்சையின் பின்னர் தகுதியான விண்ணப்பதாரிகள் விகிதாசார அடிப்படையில் பிரித்து உரிய மாவட்டத்தினாலும் ஒவ்வொரு வருடத்திற்கும் உரிய ஒவ்வொரு துறையின் கீழும் இணைத்துக்கொள்ள வேண்டிய தொகை தீர்மானிக்கப்படும்.

அவ்வாறு ஒவ்வொரு வருடத்திலும் ஒவ்வொரு துறையின்கீழ் இணைத்துக்கொள்ள வேண்டிய தொகையைத் தீர்மானித்து அந்த தொகையில் 5% ஆண் விண்ணப்பதாரிகளும், 95% பெண் விண்ணப்பதாரிகளும் உள்ளடங்கும் வகையில் ஒவ்வொரு வருடத்திலும் ஒவ்வொரு துறையின் கீழும் மாவட்டத்தின் அதிகூடிய Z புள்ளிகளைப் பெற்ற விண்ணப்பதாரிகளில் இருந்து பயிற்சிக்காக தெரிவுசெய்யப்படுவர்.

2. இப்பாடநெறி முழுநேரப் பாடநெறியாகும். ஐந்து வார நாட்கள் மற்றும் சனிக்கிழமை முற்பகலில், பல்கலைக்கழகம் ஒன்றில் அல்லது சுகாதார, போசணை மற்றும் சுதேச வைத்திய அமைச்சின்கீழ் அல்லது அரச நிறுவனம் ஒன்றில் வேறு ஏதாவது நிறுவனமொன்றில் முழுநேர கற்கைநெறியைத் தொடரும் மாணவர்கள் இதற்காக விண்ணப்பிக்க முடியாது. யாரொருவர் இதற்காக விண்ணப்பித்து பின்னர் ஏதாவது சந்தர்ப்பத்தில் தெரியவருமிடத்து அவரை கற்கைநெறி/ பதவியிலிருந்து நீக்கப்படுவதுடன் அதுவரை அரசினால் அவருக்காக செலவிட்ட சகல கொடுப்பனவுகளும் அவரிட மிருந்து அறவிடப்படும். பல்கலைக்கழகம் ஒன்றில் அல்லது

வேறு அரச நிறுவனமொன்றில் முழுநேர கற்கை நெறியைத் தொடரும் ஒருவர் இதற்காக விண்ணப்பிக்க விரும்பினால் பின்வரும் முறைகளைப் பின்பற்றப்படல் வேண்டும் :-

2.1 2017.08.31 ஆந் திகதி ஆகும்போது நீங்கள் ஏதாவது பல்கலைக்கழகம் ஒன்றில் அல்லது வேறு அரச நிறுவனமொன்றில் முழுநேர கற்கைநெறிக்காக பதிவுசெய்திருப்பின் மாணவ தாதியர் பயிற்சிக்காக தெரிவுசெய்யப்படுமிடத்து தாதியர் பயிற்சிக்கு தாதியர் பாடசாலையில் பதிவுசெய்வதற்கு முன்னர் பயிற்சியை அல்லது கற்கைநெறியின் பதிவை இரத்துச்செய்துகொள்ள வேண்டும்.

2.2 2017.08.31 ஆந் திகதிக்கு பல்கலைக்கழகம் ஒன்றில் அல்லது சுகாதார, போசணை மற்றும் சுதேச வைத்திய அமைச்சின்கீழ் நடாத்தப்படும் கற்கைநெறிகளில் பதிவுசெய்யாதவராக இருப்பின் தாதியர் பயிற்சிப் பயிலுநர் பதிவுசெய்யும் திகதியாகும் போது பதிவுசெய்திருப்பின், அவர்களும் தாதியர் பயிற்சிக்கான பதிவை மேற்கொள்ள முன்னர் அந்த கற்கைநெறியின் பதிவை இரத்துச் செய்துகொள்ள வேண்டும்.

2.3 சுகாதார, போசணை மற்றும் சுதேச வைத்திய அமைச்சின்கீழ் நடாத்தப்படும் முழுநேரப் பயிற்சி நெறியில் பதிவுசெய்துள்ள விண்ணப்பதாரியாயின், அவர்களும் மாணவ தாதியர் பயிற்சிக்காக தெரிவு செய்யப்பட்டால் அதுவரை பெற்றுக்கொண்டு இருந்த பயிற்சிக்காக கைச்சாத்திட்ட ஒப்பந்தத்தில் குறிப்பிடப்பட்டுள்ள நிதி மற்றும் அதுவரையிலும் பெற்றுக்கொண்ட சகல கொடுப்பனவுகளையும் செலுத்தி உரிய பயற்சியிலிருந்து நீங்கிக் கொண்டால் மாத்திரமே மாணவர் தாதியர் பயிற்சிக்காக பதிவுசெய்யப்படுவர்.

**கவனத்திற்கொள்ள வேண்டியவை :**

(1) மேற்குறிப்பிடப்பட்ட 2.1 இல் இருந்து 2.3 வரை குறிப்பிடப்பட்டுள்ள நிபந்தனைகளைப் பூர்த்திசெய்திருப்பினும் நீங்கள் போதியளவு Z பெறுமானத்தைப் பெறாதவிடத்து அல்லது இங்கு குறிப்பிடப்பட்டுள்ள ஏனைய நிபந்தனைகளைப் பூர்த்திசெய்திராவிடின், எவ்விதத்திலும் இப்பயிற்சிக்குத் தகுதியற்றவராகக் கருதப்படுவர்.

(2) மேலும், நீங்கள் போதியளவு Z பெறுமானத்தைப் பெற்று இங்கு குறிப்பிடப்பட்டுள்ள ஏனைய நிபந்தனைகளைப் பூர்த்திசெய்திருப்பினும் 2.1 இல் இருந்து 2.3 வரை குறிப்பிடப்பட்டுள்ள நிபந்தனைகளைப் பூர்த்தி செய்யாதவிடத்து, எவ்விதத்திலும் பயிற்சிக்காக பதிவுசெய்யப்பட மாட்டாது.

3. **கல்வித் தகைமைகள்**.- (அ) 2015 அல்லது 2016 ஆம் ஆண்டுகளில் ஏதாவது ஓர் ஆண்டில் க. பொ. த. (உ. த.) பரீட்சையில் உயிரியல் விஞ்ஞான துறைக்குரிய உயிரியல், இரசாயனவியல், விவசாயவியல், பௌதீகவியல் மற்றும் கணிதம் ஆகிய பாடங்களில் 3 இல் தோற்றி அனைத்துப் பாடங்களிலும் ஒரே அமர்வில் சித்தியடைந்திருத்தல் வேண்டும். (பொது அறிவுப் பரீட்சை மற்றும் பொது ஆங்கிலம் தவிர்ந்த)

அல்லது

க. பொ. த. (உ. த.) பரீட்சையில் பௌதீக விஞ்ஞானத் துறைக்குரிய இணைந்த கணிதம், இரசாயனவியல், பௌதீக வியல் மற்றும் உயர் கணிதம் ஆகிய பாடங்களில் 3 இல் தோற்றி அனைத்துப் பாடங்களிலும் ஒரே அமர்வியில் சித்தியடைந்திருத்தல் வேண்டும். (பொது அறிவுப் பரீட்சை மற்றும் பொது ஆங்கிலம் தவிர்ந்த)

மற்றும்

(ஆ) க. பொ. த. (சா. த.) பரீட்சையில் சிங்கள மொழி/ தமிழ் மொழி, கணிதம், விஞ்ஞானம் மற்றும் ஆங்கிலம் ஆகிய பாடங்களில் 4 பாடங்களில் திறமைச் சித்தியுடன் இரண்டுக்கு மேற்படாத அமர்வுகளில் ஆறு பாடங்களில் சித்தியடைந்திருத்தல் வேண்டும்.

4. **ஏனைய தகைமைகள்**.- (அ) இலங்கைப் பிரசையாக இருக்க வேண்டும்.

(ஆ) 2017.08.31 ஆந் திகதியில் 18 வயதுக்குக் குறையாமலும் 28 வயதுக்கு மேற்படாமலும் இருக்க வேண்டும்.

(இ) *உயரம்* : 4 அடி 10 அங்குலத்திற்கு (147.3 cm) குறையாதிருத்தல்.

(ஈ) திருமணமாகாதவராக இருத்தல் வேண்டும்.

(உ) நாட்டின் எப்பாகத்திலும் தாதி உத்தியோகத்தராக சேவையாற்றக்கூடிய உடற்தகைமையைக் கொண்டிருத்தல் வேண்டும்.

(ஊ) பதவிக்குரிய கடமைகளை நிறைவேற்றுவதற்குத் தேவையான உடற்தகைமையைக் கொண்டிருத்தல் வேண்டும்.

(எ) விண்ணப்பதாரி நல்லொழுக்கம் உள்ளவராக இருத்தல் வேண்டும்.

(ஏ) ஆண்/ பெண் இருபாலாரும் விண்ணப்பிக்கலாம்.

(ஐ) தான் விண்ணப்பிக்கும் மாவட்டத்தில் விண்ணப்ப முடிவுத் திகதியான 2017.08.31 ஆந் திகதிக்கு கிட்டிய 3 வருடங்கள் தொடர்ந்து வசித்து இருக்க வேண்டும். தமது வதிவை உறுதிப்படுத்துவதற்காக கீழ்க்குறிப்பிடப்பட்டுள்ள விடயங்களில் ஒன்றைப் பூர்த்தி செய்திருத்தல் வேண்டும் என்பதுடன், குறித்த ஆவணங்கள் நேர்முகப் பரீட்சையின்போது சமர்ப்பிக்க வேண்டும் :

(i) 2017.08.31 ஆந் திகதிக்கு கிட்டிய முன்னைய 3 வருடங்களுக்குள் அவர் அம்மாவட்டத்தில்

3 வருடங்களாவது தொடர்ந்து வசித்து இருக்க வேண்டும். (இங்கு பிரதேச செயலாளரது மேலொப்பத்துடன் கிராம அலுவலரின் சான்றிதழ் சமர்ப்பிக்கப் பட வேண்டும்).

(ii) மாவட்ட தேர்தல் அலுவலகத்தினால் கிட்டிய 3 வருடத்திற்குரிய வாக்காளர் பெயர்ப் பதிவேட்டின் பிரதியொன்றைச் சமர்ப்பித்தல் வேண்டும்.

5. **விண்ணப்பிக்கும் முறை**.- (அ) இந்த அறிவித்தலில் குறிப்பிடப்பட்டுள்ள மாதிரி விண்ணப்பப்படிவத்தின் பிரகாரம் ஏ4 அளவுத் தாளில் இரு பக்கங்களையும் பயன்படுத்தி விண்ணப்பங்களைத் தயாரித்தல் வேண்டும்.

மாதிரி விண்ணப்பப் படிவத்தில் குறிப்பிட்டுள்ள இலக்கம் 1 முதல் இலக்கம் 9 வரை முதல் பக்கத்திலும் இலக்கம் 10 இரண்டாம் பக்கத்திலும், இலக்கம் 11 தொடக்கம் 13 வரை மூன்றாம் பக்கத்திலும் இருக்கும் வகையில் விண்ணப்பங்களைத் தயாரித்துக் கொள்ள வேண்டும். மேலும் விண்ணப்பப்படிவத்தின் வலது பக்க மேல் மூலையிலுள்ள பெட்டியினுள் உரிய தகவல்களைக் கட்டாயமாக நிரப்ப வேண்டும்.

**குறிப்பு**.- மேலே (3) மற்றும் (4) இன்கீழ் குறிப்பிடப்பட்டுள்ள தகைமைகள் மற்றும் ஏனைய தகைமைகள் விண்ணப்பங்கள் கோரப்பட்ட இறுதித் திகதியான 2017.08.31 ஆந் திகதிக்கு சகல விதத்திலும் பூர்த்திசெய்திருத்தல் வேண்டும்.

(ஆ) விண்ணப்பத்தை உரிய முறையில் பூர்த்திசெய்து கடித உறையினுள் இட்டு அவ்வுறையின் இடது பக்க மேல் மூலையில் ''மாணவ தாதியர் பயிற்சிக்கு இணைத்துக் கொள்ளல் - 2017'' மற்றும் வசிக்கும் மாவட்டத்தையும் குறிப்பிட்டு 2017.08.31 ஆந் திகதிக்கு முன்னர் ''பணிப்பாளர் (நிர்வாகம்) 01, சுகாதார அமைச்சு, இல. 385, வண. பத்தேகம விமலவங்ச தேரர் மாவத்தை, கொழும்பு 10'' என்னும் முகவரிக்கு பதிவுத்தபால் மூலம் அனுப்ப வேண்டும்.

(இ) இலங்கை நிர்வாக சேவையில்/ கல்வி சேவையில்/ அரசாங்கத்தின் கணக்காளர் சேவையில்/ அரசாங்க பாடசாலையொன்றின் அதிபர் ஒருவர்/ சமாதான நீதவான்/ சட்டத்தரணி ஒருவர் அல்லது வருடாந்தம் 2,40,360 ரூபாவிற்குக் குறையாத சம்பளம் பெறும் அரசாங்க உத்தியோகத்தர் ஒருவரினால் விண்ணப்பப்படிவத்தில் விண்ணப்பதாரியின் கையொப்பத்தை உறுதிப்படுத்தல் வேண்டும்.

(ஈ) விண்ணப்பதாரிகள் 300 ரூபாவினை இலங்கை வங்கியின் தப்ரபேன் கிளையில் 7041318 எனும் சுகாதார சேவைப் பணிப்பாளர் நாயகத்தின் பரீட்சைக் கட்டணம் சேகரிப்பு கணக்கிலக்கத்துக்கு சேரும்படி செலுத்திப் பெற்றுக்கொண்ட பற்றுச்சீட்டை மாதிரி விண்ணப்பப்படிவத்தில் பெட்டியினுள் கழராதவாறு ஒட்டுதல் வேண்டும். இந்தக் கட்டணம் எக்காரணத்தைக் கொண்டும் மீண்டும் திருப்பித்தரப்பட மாட்டாது என்பதுடன், வேறு பரீட்சைகளுக்காக மாற்றம் செய்வதற்கும் இடமளிக்கப்பட மாட்டாது.

6. பூரணப்படுத்தப்படாத, மாதிரி விண்ணப்பப்படிவத்துக்கு முரணான, அடிப்படைத் தகைமைகளைப் பூர்த்திசெய்திராத, பற்றுச்சீட்டு ஒட்டப்படாத மற்றும் 2017.08.31 ஆந் திகதி அல்லது அதற்கு முன்னர் பதிவுசெய்யப்படாத விண்ணப்பங்கள் எவ்வித முன்னறிவித்தலும் இன்றி நிராகரிக்கப்படும் என்பதுடன், விண்ணப்பப்படிவம் கிடைக்கப்பெற்றதாகவும் அறிவிக்கப்பட மாட்டாது.

7. மேல் குறிப்பிடப்பட்டுள்ள தகைமைகளைப் பூர்த்தி செய்துள்ள விண்ணப்பதாரிகளின் Z பெறுமானத்திற்கு அமைய முன்னுரிமை அடிப்படையில் நேர்முகப் பரீட்சைக்காக அழைக்கப்படுவர். சுகாதார, போசணை மற்றும் சுதேச வைத்திய அமைச்சின் செயலாளரினால் நியமிக்கப்படுகின்ற நேர்முகச் சபையினால் நேர்முகப் பரீட்சை நடாத்தப்பட்டு தாதியர் சேவைப் பிரமாணக் குறிப்பு மற்றும் இவ்வர்த்தமானி அறிவித்தலில் குறிப்பிடப்பட்டுள்ள தகைமைகள் பரீட்சிக்கப்படுவதுடன், உடற்தகைமைகளும் பரீட்சிக்கப்படும்.

**குறிப்பு** :

(அ) தாதியர் பாடசாலைகளில் நிலவுகின்ற இடவசதி மற்றும் சேவைத் தேவைப்பாட்டின் பிரகாரம் இணைத்துக்கொள்ள வேண்டிய தொகை மற்றும் நேர்முகப் பரீட்சைக்கு அழைக்கப்பட வேண்டிய எண்ணிக்கை தொடர்பாக சுகாதார, போசணை மற்றும் சுதேச வைத்திய அமைச்சின் செயலாளரின் தீர்மானம் இறுதித் தீர்மானம் ஆகும் ;

(ஆ) நேர்முகப் பரீட்சைக்கு அழைக்கப்படுகின்ற சகலரும் பயிற்சிக்கு இணைத்துக்கொள்ளப்படுவர் என இங்கு உள்வாங்கப்பட்ட எந்தப் பந்தியிலும் குறிப்பிடப்படவில்லை என்பதைக் கவனத்தில் கொள்ளல் வேண்டும் ;

(இ) நேர்முகப் பரீட்சையின் பின்னர் தகுதியுள்ள மற்றும் தகுதியற்ற விண்ணப்பதாரிகள் மற்றும் தெரிவுசெய்யப்பட்ட, தெரிவுசெய்யப்படாத விண்ணப்ப தாரிகளின் விபரங்கள் www.health.gov.lk இணையத்தளத்தில் வெளியிடப்படுவதுடன் யாருக்கும் தனிப்பட்ட ரீதியில் அறிவிக்கப்பட மாட்டாது.

8. நேர்முகப் பரீட்சையின்போது விண்ணப்பதாரிகளால் பின்வரும் ஆவணங்களின் மூலப்பிரதிகள் மற்றும் அவற்றில் தம்மால் சான்றுப்படுத்தப்பட்ட பிரதிகளையும் நேர்முகப் பரீட்சை சபையிடம் சமர்ப்பித்தல் வேண்டும் என்பதுடன், பின்னர் சமர்ப்பிக்கப்படுகின்ற எந்தவொரு ஆவணமும் ஏற்றுக்கொள்ளப்படமாட்டாது :

(அ) பிறப்பு அத்தாட்சிப்பத்திரம் ;

(ஆ) க. பொ. த. (உயர் தரம்) பரீட்சை பெறுபேறு மற்றும் Z பெறுமானத்தைக் குறிக்கும் சான்றிதழ் ;

(இ) க. பொ. த. (சாதாரண தரம்) பரீட்சை பெறுபேற்றுச் சான்றிதழ் ;

(ஈ) தேசிய ஆள் அடையாள அட்டை அல்லது கடவுச்சீட்டு அல்லது செல்லுபடியாகும் சாரதி அனுமதிப் பத்திரம் ;

(உ) மேலே 4 (ஊ) இல் குறிப்பிடப்பட்டுள்ள வதிவிடத்தை உறுதிப்படுத்துவதற்கான ஆவணம் ;

(ஊ) விவாகமாகாதவர் என்பதை உறுதிப்படுத்துவதற்கான சமாதான நீதவான் முன்னிலையில் கையொப்பமிடப் பட்ட சத்தியக் கடதாசி.

**குறிப்பு**.- மேற்படி அ, ஆ, இ, ஈ இன் கீழ்க்குறிப்பிடப் பட்டுள்ள சான்றிதழ்கள் உண்மையானவை என தம்மால் சான்றுறுதிப்படுத்தப்பட்ட பிரதியை விண்ணபத்துடன் அனுப்ப வேண்டும்.

9. **பயிற்சித் திட்டம்**.- (அ) தேர்ந்தெடுக்கப்பட்ட விண்ணப்பதாரர்கள் மாணவ ஆண்/ பெண் தாதியர் களாக தாதியர் பயிற்சிப் பாடசாலைக்குச் சேர்த்துக் கொள்ளப்படுவதுடன், 3 ஆண்டுகள் பயிற்சிக் கற்கைநெறியை அவர்கள் கற்றல் வேண்டும்.

(ஆ) பயிற்சிக்காக இணைத்துக் கொள்ளப்படும் பயிலுநர்கள் பயிற்சிப் பாடசாலைகளில் வலுவில் இருக்கும் விதிமுறைகளுக்குக் கட்டுப்படல் வேண்டும். அவ்விதிமுறைகள் மற்றும் அரசினால் காலத்திற்குக்காலம் விதிக்கப்படும் ஏனைய விதிமுறைகளுக்கும் கட்டுப்படல் வேண்டும்.

(இ) பயிற்சிக் காலத்தில் நடாத்தப்படும் பரீட்சைகளில் சித்திபெறத் தவறும் அல்லது அவர்களின் வேலையும் நடத்தையும் திருப்திகரமாக இல்லாவிட்டால் அல்லது தமது பயிற்சிப் பாடசாலையினது பரீட்சை மற்றும் விடுமுறை நிபந்தனைகளுக்கு அமையத் தவறும் அல்லது பயிற்சிக்கு இணைத்துக் கொள்வதற்காக சமர்ப்பிக்கப்பட்ட கல்வி மற்றும் ஏனைய தகைமைகளில் ஏதாவது பொய் அல்லது பிழையானவையென தெரியவருமிடத்து பயிற்சியின் எந்தவொரு சந்தர்ப்பத்திலும் எவ்வித நட்டஈடுகளும் இன்றி பயிற்சியிலிருந்து நீக்கப்படுவர். பயிற்சிக் காலத்தில் பயிலுநர்களுக்கு விடுமுறைகள் எதுவும் உரித்தில்லை என்பதுடன், அக்காலத்தினுள் வரவின்மைக்காக விசேட கொடுப்பனவில் இருந்து விகிதாசார அடிப்படையில் ஒரு தொகை கழிக்கப்படும். அத்துடன் பரீட்சை எழுதுவதற்கு 80% இற்குக் குறையாத வரவு இருத்தல் கட்டாயமானதாகும்.

(ஈ) பயிற்சிக் காலத்தில் அரச நிருவாக சுற்றறிக்கை 03/2016 இன் நியதிகளுக்கு அமைய மாணவ தாதியர்களுக்கு மாதாந்தக் கொடுப்பனவு வழங்கப்படும்.

(உ) பயிற்சியின்போது பயிற்சியிலிருந்து விலகினால் அல்லது பயிற்சியை இடைநடுவில் கைவிட்டால் ஒப்பந்தப் பணம், பயிற்சிக் காலத்தில் அவருக்கு வழங்கப்பட்ட கொடுப்பனவுகள், அரசினால் பயிற்சிக்காக செலவிடப்பட்ட செலவுகள் அவரினால் திணைக்களத்திற்குச் செலுத்த வேண்டும். அவ்வாறு செய்யத்தவறின் அந்தப் பணத்தை அறவிடுவதற்கு தகுந்த நடவடிக்கை எடுக்கப்படும்.

10. **விவாகமாகாத நிபந்தனைகளும் உடன்படிக்கை களும்**.- (அ) சகல விண்ணப்பதாரிகளும் விண்ணப்பங்களை அனுப்பும் திகதியில் விவாகமாகாதவர்களாக இருக்க வேண்டும் என்பதுடன், பயிற்சிக்காலத்திலும் விவாகமாகாதிருத்தல் கட்டாயமாகும். அதனை உறுதிப்படுத்த சமாதான நீதவான் முன்னிலையில் கையொப்பமிடப்பட்ட சத்தியக்கடதாசியொன்று நேர்முகப் பரீட்சை சபையிடம் சமர்ப்பித்தல் வேண்டும்.

(ஆ) தாதியர் பயிற்சிப் பாடசாலைக்கு பயிற்சிக்காக உள்வாங்கப்படும்போது பயிற்சியை சிறப்பாக நிறைவு செய்வதாகவும், அப்பயிற்சியை இடைநடுவில் கைவிடுவதில்லை எனவும், அந்தப் பயிற்சியை முழுமையாக நிறைவுசெய்த பின்னர் உரிய பதவிக்கு நியமனம் வழங்கப்பட்டால் குறைந்தபட்சம் பத்து வருடங்கள் (10) சுகாதார, போசணை மற்றும் சுதேச வைத்திய அமைச்சில் அல்லது மாகாண அமைச்சின் கீழுள்ள வைத்தியசாலைகளில் சேவையாற்றுவதாகவும், சுகாதார சேவைகள் பணிப்பாளர் நாயகத்துடன் ஒப்பந்தத்திற்கும், பிணைக்கும் உடன்படல் வேண்டும். சுகாதார சேவைகள் பணிப்பாளர் நாயகத்தினால் இந்தக் கால எல்லை அவ்வப்போது வரையறுக்கப்படும்.

11. **சேவையில் ஈடுபடும் நியதிகள்**.- (அ) சகல பயிலுநர்களும் பயிற்சி ஆரம்பிக்க முன்பு மருத்துவ பரிசோதனை செய்துகொள்ள வேண்டும்.

(ஆ) பயிற்சியின் பின்னர் நிரந்தர நியமனம் வழங்குவதற்கு அரசு பொறுப்பு ஏற்காது. மூன்று வருட பயிற்சியை சிறப்பாக நிறைவுசெய்து இறுதிப் பரீட்சையில் தேர்ச்சி பெறும் மாணவ தாதி உத்தியோகத்தர்களுக்கு நிரந்தர நியமனம் வழங்குவதற்கு அரசாங்கம் உத்தேசித்தால் அவர்களை 2016.02.25 ஆந் திகதிய அரச நிர்வாக சுற்றறிக்கை 03/ 2016 இன்படி MT 07-2016 இற்கு அமைவாக தாதி உத்தியோகத்தர்கள், தரம் III இன் பதவிநிலை தாதியர் பதவிகளுக்கு நிலவும் வெற்றிடங்களின்படி நியமிக்கப்படுவர்.

(இ) தாதியர் சேவையில் சகல உத்தியோகத்தர்களும் இலங்கைச் சனநாயக சோசலிசக் குடியரசின் தாபன விதிக்கோவை விதிமுறைகள், அரச சேவை ஆணைக்குழு வினால் அரச சேவைகள் தொடர்பாக விதிக்கப்படும் விதிமுறைகள் மற்றும் சட்டதிட்டங்களுக்கும், தாதியர் சேவை பிரமாணக் குறிப்பின் நியதிகளுக்கும், அரச நிதிப்பிரமாணத்திற்கும், அரசினால் விதிக்கப்படும் ஏனைய விதிமுறைகள், சுற்றறிக்கைகள் மற்றும் அறிவுறுத்தல்கள் மற்றும் அவற்றில் காலத்திற்குக்காலம் ஏற்படுத்தக்கூடிய திருத்தங்கள் என்பவற்றுக்கு கட்டுப்படல் வேண்டும்.

(ஈ) விண்ணப்பத்தை நிரப்பும்போது கல்வி மற்றும் ஏனைய தகைமைகள் மற்றும் விபரங்களை மிகவும் கவனமாகவும் பிழையின்றியும் உள்ளடக்கவும். பயிற்சிக்காக இணைத்துக் கொள்ளும்போதும் நியமனம் பெற்ற பின்பும் மேற்படி சான்றிதழ்கள் பொய்யானவை என நிரூபணமாகினால், சட்ட ரீதியாக நடவடிக்கை எடுப்பதற்காக குற்றப்புலனாய்வுத் திணைக்களத்திற்குச் சமர்ப்பிப்பதற்கும், வழங்கப்பட்ட நியமனம் இரத்துச்செய்யப்பட்டு பயிற்சியிலிருந்து/ பதவியிலிருந்து நீக்கப்படுவதோடு அது தொடர்பாக ஒழுக்காற்று நடவடிக்கை எடுப்பதுடன், மீண்டும் அரச சேவையில் இணைய முடியாதவாறு கறுப்புப்பட்டியலில் அவருடைய

பெயர் சேர்க்கப்படுவதுடன், பயிற்சிக் காலத்தில் இவருக்கு வழங்கப்பட்ட கொடுப்பனவுகள், அரசினால் செலவிட்ட செலவினங்கள் மற்றும் ஒப்பந்தப் பணம் அவரிடமிருந்து அறவிடப்படுவதற்கு நடவடிக்கை எடுக்கப்படும்.

(உ) பயிற்சிக்கு இணைத்துக் கொள்ளப்படுபவர்களுக்கு பயிற்சிப் பாடசாலைகளில் தங்கமிட வசதிகள் வழங்குவதற்கு இவ்வமைச்சு கட்டுப்படவில்லை.

(ஊ) இப்பயிற்சிக் காலத்தினுள் தொழிற்சங்க நடவடிக்கைகளில் ஈடுபடுதல் அல்லது தனியார் சேவையில் ஈடுபடுதல் தொடர்பாக உரிமைகள் ஏதும் இல்லை. அவ்வாறான நடவடிக்கைகளில் ஈடுபட்டதாக தெரியவரின் பயிற்சியில் இருந்து நீக்கப்படும் அல்லது வேறு பொருத்தமான நடவடிக்கைகள் எடுக்கப்படும்.

(எ) பயிற்சிக்கு இணைத்துக்கொள்ளல் தொடர்பாக இந்த வர்த்தமானி அறிவித்தல் மூலம் உள்வாங்கப்பட்ட அல்லது உள்வாங்கப்படாத ஏதேனுமோர் விடயம் தொடர்பாக சிக்கல்கள் தோன்றினால் சுகாதார, போசணை மற்றும் சுதேச வைத்திய அமைச்சின் செயலாளரினால் எடுக்கப்படும் தீர்மானமே இறுதித் தீர்மானமாகும். இந்த வர்த்தமானி அறிவித்தலில் சிங்களம், தமிழ் மற்றும் ஆங்கிலம் ஆகிய மொழிகளில் முரண்பாடுகள் ஏற்படுமிடத்து, சிங்கள மொழியே வலுவில் இருக்கும்.

ஜனக சுகததாச,
செயலாளர்,
சுகாதார, போசணை மற்றும்
சுதேச வைத்திய அமைச்சு.

சுகாதார, போசணை மற்றும் சுதேச வைத்திய அமைச்சு,
“சுவசிரிபாய”,
இல. 385, வண. பத்தேகம விமலவன்ச தேரர் மாவத்தை,
கொழும்பு 10,
2017, யூலை 28.

மாதிரி விண்ணப்பப்படிவம்

| | |
|---|---|
| மாவட்டம் | |
| உயர்தர பாடத்துறை | |
| உயர் தரம் சித்தியடைந்த வருடம் | |
| மொழி மூலம் | |

**சுகாதார, போசணை மற்றும் சுதேச வைத்திய அமைச்சு**

*மாணவ தாதியர் பயிற்சிக்கான ஆட்சேர்ப்பு - 2017*

1. (அ) முதலெழுத்துக்களுடன் பெயர் (ஆங்கில பெரிய எழுத்துக்களில்) :----.

(ஆ) முழுப் பெயர் (சிங்களத்தில்/ தமிழில்) :----.

(இ) முழுப் பெயர் (ஆங்கில பெரிய எழுத்துக்களில்) : ----.

2. தபால் முகவரி (ஆங்கிலத்தில்) :----.

3. (i) நிரந்தர முகவரி (தமிழில்) :

(ii) நிரந்தர முகவரி (ஆங்கிலத்தில்) :

(iii) தொலைபேசி இலக்கம் :

| | | | | | | | | | | |
|---|---|---|---|---|---|---|---|---|---|---|
| கையடக்க | | | | | | | | | | |
| நிரந்தர | | | | | | | | | | |

4. பிறந்த திகதி :-

ஆண்டு :---- மாதம் :---- திகதி :----.

5. 2017.08.31 ஆந் திகதியன்று வயது :-

வருடங்கள் :----, மாதங்கள் :----, நாட்கள் :----.

6. பால் (ஆண்/ பெண்) :

| | |
|---|---|
| ஆண் | |
| பெண் | |

(உரிய கூட்டில் “✓” அடையாளம் இடுக)

7. நீங்கள் இலங்கைப் பிரசையா?

| | |
|---|---|
| ஆம் | |
| இல்லை | |

(உரிய கூட்டில் “✓” அடையாளம் இடுக.)

8. தேசிய ஆள் அடையாள அட்டை இலக்கம் :-

| | | | | | | | | | |
|---|---|---|---|---|---|---|---|---|---|
| | | | | | | | | | |

9. உயரம் :- அடி :-----, அங்குலம் :-----. /சென்ரி மீற்றரில் :-----.

10. (அ) கல்விப் பொதுத் தராதர (உயர் தரப்) பரீட்சை

வருடம் :-----. சுட்டெண் :-----.

Z பெறுமதி :-----, பாடநெறி :-----.

| பாடங்கள் | தரம் | அலுவலக உபயோகத்திற்கு |
|---|---|---|
| 1. | | |
| 2. | | |
| 3. | | |
| 4. | | |

(ஆ) கல்விப் பொதுத் தராதர (சாதாரண தரம்) பரீட்சை :

முதலாம் அமர்வு :

(i) பரீட்சை வருடமும் மாதமும் :----.
(ii) சுட்டிலக்கம் :----.

| பாடங்கள் | தரம் | அலுவலக உபயோகத்திற்கு |
|---|---|---|
| 1. கணிதம் | | |
| 2. விஞ்ஞானம் | | |
| 3. தமிழ் | | |
| 4. | | |
| 5. | | |
| 6. | | |
| 7. | | |
| 8. | | |
| 9. | | |
| 10. | | |

இரண்டாம் அமர்வு :

(i) பரீட்சை வருடமும் மாதமும் :----.
(ii) சுட்டிலக்கம் :----.

| பாடங்கள் | தரம் | அலுவலக உபயோகத்திற்கு |
|---|---|---|
| 1. கணிதம் | | |
| 2. விஞ்ஞானம் | | |
| 3. தமிழ் | | |
| 4. | | |
| 5. | | |
| 6. | | |
| 7. | | |
| 8. | | |
| 9. | | |
| 10. | | |

11. ஏதாவது குற்றச்செயலுக்காக நீதிமன்றத் தண்டனை அனுபவித்துள்ளீரா? :-

| | |
|---|---|
| ஆம் | |
| இல்லை | |

(உரிய கூட்டில் "✓" அடையாளம் இடுக)

"ஆம்" எனில், தயவுசெய்து விபரங்களைக் குறிப்பிடுக :----.

12. **விண்ணப்பதாரியின் உறுதியுரை :**

(அ) இவ்விண்ணப்பத்தில் என்னால் கொடுக்கப்பட்ட விபரங்கள் அனைத்தும் எனது அறிவுக்கு எட்டியவரையில் உண்மையானதும் சரியானதுமாகும்.

(ஆ) என்னால் கொடுக்கப்பட்ட உறுதியுரை பிழையென பின்னர் தெரியவரின் நான் சேவையிலிருந்து விலக்கப்படுவேன் என நன்கு அறிவேன்.

| |
|---|
| ரூபா 300 பணம் செலுத்திய பற்றுச்சீட்டை இங்கு ஒட்டவும். |

------,
விண்ணப்பதாரியின் கையொப்பம்.

திகதி :-----.

13. **விண்ணப்பதாரியின் கையொப்பத்தை உறுதிப் படுத்தல் :**

இந்த விண்ணப்பத்தைச் சமர்ப்பித்த திரு./திருமதி/செல்வி .......................... என்பவர் எனக்கு தனிப்பட்ட முறையில் பரீட்சயமானவர் என்றும் அவரது கையொப்பத்தை எனது முன்னிலையில் ................................ ஆந் திகதி இட்டார் என்றும் இத்தால் உறுதிப்படுத்துகின்றேன்.

-----,
உறுதிப்படுத்துபவரின் கையொப்பம்.

உறுதிப்படுத்துபவரின் முழுப்பெயர் :-----.
பதவி :-----.
முகவரி :-----.
திகதி :-----.

8-462

இலங்கை அரசாங்க அச்சுத் திணைக்களத்திற் பதிப்பிக்கப்பெற்றது.